REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 27 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 228 | Tuesday 27, September, 2022 | 12 பக்கங்கள் | 40/-




## அமைதியாக போராட்டம் நடத்த எந்த தடையுமில்லை

### பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், சாதிக் ஷிஹான்**



அமைதியான போராட்டங்களை நடத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை என பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இருப்பினும் போராட்டம் நடப்பதற்கு ஆறு மணி நேரத்திற்கு முன்னதாக உள்ளூர் பொலிஸாரிடம் போராட்டத்திற்கான அனுமதி பெற வேண்டும் என்றும் அவர்

04

## ஊட்டச்சத்து குறைபாடுகளை கண்டறிவதற்கு கணக்கெடுப்பு

### சுகாதார அமைச்சு விரைவில் நடவடிக்கை



ஊட்டச்சத்து பிரச்சினைகளை கண்டறிவதற்கான கணக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் பதிவாகிய சம்பவங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர், கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு

04

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் பிரதிவாதி;

## ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான வழக்கை தொடருவதில்லை

### தொடர முடியாது என உயர்நீதிமன்று தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெறுவது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்து முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தொடர்ந்தும் வழக்கு

04

பொருளாதார மீட்சி பெற அந்நிய செலாவணி அவசியம்:

# புலம்பெயர் தொழிலாளருக்கு ஓய்வூதியத் திட்டம் அறிமுகம்

### 'மனுசவிய' திட்டம் நேற்று அமைச்சர் மனுஷவினால் ஆரம்பித்து வைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**எதிர்கால அரசியல் தொடர்பில் சிந்திக்காது நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண ஒன்றிணையுமாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார அழைப்பு**



வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

'மனுஷவிய' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மேற்படி ஓய்வூதியத் திட்டம் நேற்றைய தினம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஓய்வூதிய திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர்,

எமது எதிர்கால அரசியல் தொடர்பில் சிந்திக்காமல் மக்கள் எதிர்கொண்ட

04



இராணுவத்தின் 73 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று (26) கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் இஸ்லாமிய மத நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதம விருந்தினராக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே உட்பட இராணுவ அதிகாரிகளும் நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பள்ளிவாசல் நிர்வாக சபைத்தலைவர் அல்ஹாஜ் மொஹமட் கலீல் இராணுவ தளபதிக்கு சிறப்பு நினைவுச் சின்னமொன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

படம்: இராணுவ ஊடகப்பிரிவு



## தேசிய பேரவையில் இணைய தமிழ் கூட்டமைப்பு நிபந்தனை

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டுமாம்

03

லக்ஷபான பழுது; டீசல் இல்லை; CEBயிடம் பணமில்லை;

## மின்வெட்டு நேரத்தை மேலும் அதிகரிக்க மூன்று காரணங்கள்

**நிலைமையை விளக்குகிறார் அமைச்சர் கஞ்சன**



லக்க்ஷபான மின் உற்பத்தி நிலையம் பழுதடைந்துள்ளதாலும் டீசல் மற்றும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபையிடம் போதிய பணம் இல்லாததாலும், நீர் மின் சாரத்தை உரிய முறையில் முகாமைத்துவப்படுத்த முடியாததாலும் மின்வெட்டை நீடிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெயின் தரம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்வைக்கும்

04

அவசர உணவு உட்பட விவசாய உதவிகள்;

## இலங்கைக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்கும் UK



பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு இங்கிலாந்து அவசர உணவு மற்றும் விவசாய உதவிகளை வழங்கி வருகிறது.

மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான மக்கள் உணவுக்கு சிரமப்படுகின்றனர். மேலும் எரிபொருள், மின்சாரம் மற்றும் மருந்துகள்

04

நாட்டில் தற்போது அமைதியான சூழல் உள்ள நிலையில்;

## பொதுமக்களது இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தினால் நடவடிக்கை

### பொலிஸார் சட்டத்தை அமுல்படுத்துவர் - பாதுகாப்பு செயலாளர்

**லோரன்ஸ் செல்வநாயகம், சாதிக் ஷிஹான்**



நாட்டில் அமைதியான சூழல் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுமானால் அது தொடர்பில் பொலிஸார் சட்டத்தை நடைமுறைப்படுத்துவர் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

04

## முட்டையின் விலையை குறைக்க நடவடிக்கை

### முட்டை வர்த்தகர் சங்கம் தெரிவிக்கிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சந்தையில் கோழி முட்டையின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில் அதன் விலைகளை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக முட்டை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோழித்தீனுக்கான உற்பத்தி செலவுகள்

04

ஜனாதிபதி நாட்டில் இல்லாத காலப்பகுதியில்;

## ஜனாதிபதியின் அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள நிலையில் அவரின் பொறுப்பின் கீழ் செயற்படும் அமைச்சுக்களில் இராஜாங்க அமைச்சர்களாக செயற்படுவோர் பதில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

04

கம்பளை, பாணந்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கத் தேர்தல்களில்

## பொதுஜன பெரமுன அமோக வெற்றி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கம்பளை மற்றும் பாணந்துறை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி ஈட்டியுள்ளது.

அதற்கிணங்க பாணந்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொது சபையில் 87 ஆசனங்களில் 53 ஆசனங்களை பொது ஜன பெரமுன பெற்றுக் கொண்டுள்ளது. அதை வேளை, எதிர்க்கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய குழு 34 வாக்குகளை மட்டுமே

04

முன்னாள் ஜனாதிபதி மனைவி அயோமாவிடம்

## கப்பம் கோரிய சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது

### 10 இலட்சம் ரூபாவை கோரியதாக குற்றச்சாட்டு முன்வைப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மனைவியான அயோமா ராஜபக்ஷவிடம் கப்பம் கோரிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டாரவினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொலன்னாவ சாலமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு

04



## நாயை காப்பாற்ற தனது உயிரை மாய்த்த பெண்

பொலன்னறுவை பகுதியில் சோக சம்பவம்

03



கட்டுப்பாட்டை இழந்த 'கப்' வாகனம்;

## இரு வாகனங்களுடன் மோதி மூவர் காயம்

04



## டீசல் பவுஸரை கடத்தியவர் கைதாகி விளக்கமறியலில்

மேலும் இருவரை தேடி பொலிஸ் வலைவீச்சு

03

## பின்னவல மிருக காட்சிச்சாலை 'இரவு சபாரி பூங்கா' ஆகிறது

### சுற்றுலா பயணிகளை கவர அமைச்சு ஏற்பாடு



பின்னவல மிருகக்காட்சிச்சாலைக்கு இரவு சபாரி பூங்கா என பெயரிட தீர்மானித்துள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பின்னவல மிருகக்

04

தம்புத்தேகம வங்கியில் வைப்பிலிட கொண்டுசென்ற:

## 2 கோடியே 23 இலட்சம் ரூபா கொள்ளை

### நபர்கள் இருவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மொத்த வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகரொருவர் தம்புத்தேகமவில் உள்ள தனியார் வங்கியொன்றிற்கு வைப்பிலிடுவதற்காக

04

ரூபவாஹினி நிறுவனத்துள் அத்துமீறி நுழைவு;

## தனிஷ் அலிக்கு எதிரான வழக்கு ஜனவரி 09 இல்!



சட்டவிரோதமான முறையில் ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்துக்குள் பிரவேசித்து அதன் ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் தனிஷ் அலி உள்ளிட்ட நான்கு சந்தேக

04

இந்த வருடத்தில் 968 மில். டொலர்கள்;

## கடன் வழங்குவதில் இந்தியா முதலிடம்

### டெய்லி பைனான்சியல் டைம்ஸ் கணிப்பு




2022ஆம் ஆண்டின் நான்கு மாதங்களில் மொத்தம் 968

04

**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# நகர்வலம்



# கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கிராமப் பகுதிகள் தோறும் மஞ்சள் விதை உற்பத்தி

திறப்பனை தினகரன் நிருபர்

பின்தங்கிய கிராம மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் கிராமப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்களை ஊக்குவித்தல் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மஞ்சள் விதை உற்பத்தி திட்டம் கிராமிய பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்யும் வேலைத் திட்டமாக முன்னெடுக்கப் பட்டு வருவதாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி. எச்.எல். தேனுவர தெரிவித்தார். இத் திட்டம் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 22 பிராந்திய செயலக பிரிவுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில், சமுர்த்தி மானியம் பெறும், சமுர்த்தி மானியத்திற்கு தகுதியான குடும்பங்கள் மற்றும் பெண்கள்

தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விவசாய துறையுடன் சம்பந்தப்பட்டவர்களின் ஆதரவுடன் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். அதற்கான பரிந்துரைகள் பிரதேச செயலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 941 பயனாளிகளுக்கு சுமார் 1 மில்லியன் ரூபா பெறுமதியான விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் மாதத்தில் மஞ்சள் உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, விவசாய அலுவலர்கள் வழங்கிய முன்னேற்ற அறிக்கையின்படி இவ் உற்பத்தித் திட்டம் வெற்றிகரமான நிலையில் இருப்பதாக மாவட்ட விவசாய உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக ஒவ்வொரு 03 மாதங்களுக்கும் ஒரு தடவை விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் அந்தந்த வயல்களில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையின் முன்னேற்றம் குறித்த புகைப் படங்களுடன் மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரிய தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# முஸ்லிம்களின் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம்



கம்பஹா புத்திஜீவிகள் அமைப்பு ஒழுங்கு செய்த முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (25) கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்றது. கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயரும் சவூதி அரேபியாவின் முன்னாள் தூதுவருமான ஹுசைன் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் முஸ்லிம் கலாசார விடயங்கள், முஸ்லிம் வாசிகசாலையின் தேவை மற்றும் முஸ்லிம்களின் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மேல் மாகாணத்திற்குட்பட்ட மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நடைபெற்ற மேற்படி கூட்டத்தின் இறுதியில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை சந்தித்து மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் முன்னாள் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அல்ஹாஜ் ஏ. ஆர் முஹம்மத் உட்பட புத்திஜீவிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# அமல் சர்வதேச பாடசாலையில் இஸ்லாமிய தின நிகழ்வு



ருஸைக் பாரூக்

கொழும்பு, அமல் சர்வதேச பாடசாலையின் இஸ்லாமிய மஜ்லிஸ் ஏற்பாடு செய்த "இத்திஹாத் 20" அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான இஸ்லாமிய தினப் போட்டி விருது வழங்கும் விழா பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

நாடு முழுவதிலுமுள்ள 60 க்கும் மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 600 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். மேலும் 27 வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 120 மாணவர்கள் இதன்போது பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## சீனன்கோட்டை அல் ஸலாஹில்

# பெண்கள் ஹிப்ழ் பிரிவு ஆரம்பிக்க நடவடிக்கை

பேருவளை, சீனன்கோட்டை அல்ஸலாஹ் அரபுக் கல்லூரியில் பாடசாலை சென்று வரும் பெண் பிள்ளைகளுக்கான பகுதி நேர அல் குர்ஆன் மனன வகுப்புகள் எதிர்வரும் அக்டோபர் மாதம் கல்லூரியின் பெண்கள் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஸலாஹ் அரபிக்கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேற்படி மத்ரஸா ஆரம்பிக்கப் பட்டு 20 வருடங்களை கடந்துள்ள நிலையில் தற்பொழுது 116 ஹாபிழ்களையும் 65 ஆலிம்களையும் மேற்படி மத்ரஸா உருவாக்கியுள்ளதாக மத்ரஸா அதிபர் தெரிவித்தார்.

ஹிப்ழ் மத்ரஸாவாக ஆரம்பிக் கப்பட்ட இக்கல்லூரி குறுகிய காலத்தில் அரச பாடசாலை கல்வி திட்டத்துடன் கூடிய அல்ஆலிம் கற்கை நெறி, பாடசாலை செல்லும் உள்ளூர் மாணவர்களுக்கான பகுதி நேர அல்குர்ஆன் மற்றும் மார்க்க பயிற்சி கற்கை நெறி, பெண்களுக்கான வாராந்த தர்பியா பயிற்சி கற்கை நெறிகள் என்பவற்றுடன் விரிவடைந்துள்ளது.

அதன் அடிப்படையில் நீண்ட காலத் தேவையாக இருந்த பாடசாலை சென்று வரும் பெண் பிள்ளைகளுக்கான பகுதி நேர அல் குர்ஆன் மனன வகுப்புக்களும் அல் ஸலாஹ் அரபுக் கல்லூரியின் அனுசரணையுடன் ஆரம்பிக்க பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மத்ரஸா நிர்வாக சபை சார்பாக அதன் அதிபர் தெரிவித்தார்.

# ரூபவாஹினி செய்திப்பிரிவின் உதவிப் பணிப்பாளருக்கு இரு விருதுகள்





பங்களாதேஷ் டாக்கா நகரில் நடைபெற்ற தெற்காசிய சர்வதேச வர்த்தக சிறப்பு விருது வழங்கும் விழாவில் ஊடகத்துக்கான இரண்டு விருதுகளை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் காமினி பண்டார மெனிக்திவல பெற்றுக்கொண்டார். இவரது 'அதுரே யேம' மற்றும் 'டொலர் தெம்பிலி' ஆய்வு செய்திகளுக்கே இவ்விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

# கல்மடுக்குளத்து நீரை சட்டவிரோதமாக பயன்படுத்தி பயிர்ச்செய்கை



(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி புளியம் பொக்கணை பகுதியில் கல்மடுக்குளத்தின் நீரை சட்டவிரோதமாக பயன்படுத்தி பயிர்செய்கை மேற்கொண்டுள்ளமை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென மாவட்ட பயிர்ச்செய்கை குழுக்கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி புளியம்பொக்கணை பகுதியில் மாவட்ட பயிர்செய்கை குழுவின் தீர்மானங்களுக்கு மாறாக கல்மடுக்குளத்து நீரை பயன்படுத்தி சுமார் 50 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பிரதேசத்திலுள்ள ஆசிரியர் மற்றும் கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் பணவசதி படைத்தவர்களால் இவ்வாறு நெற்செய்கை சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நீர்ப்பாசன திணைக்களத்தின் முழுமையான கட்டுப்பாட்டிலுள்ள கல்மடுக் குளத்திலிருந்தும் இதற்காக மூன்று தடவைகள் நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு மூன்று தடவைகளும் குளத்திலிருந்து திறக்கப்பட்ட அதிகளவான நீர் வீண்விரயமாகியதுடன் சுமார் 150 ஏக்கருக்கும் அதிகமான வயல்நிலங்கள் காலபோக செய்கைக்கு பயன்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற விவசாய குழு கூட்டத்தில் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. சட்டவிரோத செய்கைகளுக்கு எதிராக தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் பிரதேச செயலகத்தினால் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தினகரன் வடக்கின் உதயம்
Vadakkin Uthayam





நவராத்திரி விரதம் நேற்றைய தினம் ஆரம்பமானதை முன்னிட்டு நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அம்மன் உள்வீதி உலா வந்தார்.
(படம்: யாழ்.விசேட நிருபர் விரதம்)

# வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக்கோவில் கொடியேற்றம்



கரவெட்டி தினகரன் நிருபர்

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக்கோவில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை காலை 5.15 மணியளவில் கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. அர்ச்சகர்கள் கிரியைகளுடன் ஆரம்பித்து 8:45 மணியளவில் கொடியேற்றம் மிக சிறப்பாக இடம்பெற்றது.

17 நாட்கள் நடைபெறும் இப்பெரும் திருவிழா எதிர்வரும் 10/10/2022 ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவடையவுள்ளது.

எதிர்வரும் 30/09/2022 வரை வல்லிபுரத்து ஆழ்வார் உள்வீதி வலம் வருவார்.

01/10/2022 அன்றிலிருந்து வல்லிபுரத்து ஆழ்வார் குருக்கட்டு விநாயகர் ஆலய தரிசனத்துடன் அனைத்து திருவிழாக்களின் போது சுவாமி வெளிவீதி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

முக்கிய திருவிழாக்களான வெண்ணெய்த்திருவிழா 02/10/2022ஆம் திகதியும், துகில்திருவிழா 03/10/2022 திகதியும், பாம்புத்திருவிழா 04/10/2022 திகதியும், கம்சன் போர்த்திருவிழா 5/10/2022 ஆம் திகதியும், வேட்டை திருவிழா 6/10/2022 ஆம் திகதியும், சப்பறத்திருவிழா 7/10/2022 ஆம் திகதியும் , தேர்த்திருவிழா 8/10/2022 திகதி சனிக்கிழமையும், சமுத்திர தீர்த்திருவிழா 9/10/2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், கேணி தீர்த்தமும் 10/10/2022 திங்கட்கிழமையும், கொடியிறக்கம் அன்றைய நாள் பிற்பகல் 6:00 மணிக்கும் இடம்பெறவுள்ளன. பெருந்திருவிழாக்களுக்கான வசதிகள் அனைத்தும் ஆலய நிர்வாகம், பருத்தித்துறை பிரதேச சபை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை காவல் நிலையம் என்பனவற்றால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதேவளை ஆலயத்திற்கு வருகை தருவோர் கலாசார உடையணிந்து, தங்க ஆபரணங்களை அணிவதை தவிர்த்து, ஆசார சீலர்களாக வருகைதருமாறு ஆலய நிர்வாகம் கோரியுள்ளது.

# கிளிநொச்சியில் 17 பவுண் தங்க நகைகள் திருட்டு



கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சியில் 17 பவுண் தங்க நகைகளும் 2 இலட்சம் ரூபா பணமும்,மோட்டார் சைக்கிளும் திருடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி திருவையாறு 2 ஆம் பகுதியிலுள்ள வீட்டிற்குள் புகுந்த கொள்ளையர்களால் 17 பவுண் தங்க நகைகளும் 2 இலட்சம் ரூபா பணமும், மோட்டார் சைக்கிளொன்றும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

திருவையாறு 2 ஆம் பகுதியிலுள்ள கணபதிப் பிள்ளை சுப்பிரமணியம் என்பவரின் வீட்டிற்குள் நள்ளிரவில் நுழைந்த கொள்ளையர்கள், முதியவர்கள் இருவரையும் கட்டி வைத்துவிட்டு பணம், நகைகள் எங்கே என விசாரித்து தாக்கியுள்ளனர்.

பின்னர் வீட்டுரிமையாளரின் மனைவி அணிந்திருந்த சங்கிலி, காப்பு உள்ளிட்ட நகைகளையும். இரண்டு இலட்சம் ரூபா பணத்தையும், கொள்ளையிட்டுள்ளனர். பின்னர் வீட்டிலிருந்து தப்பிச் செல்லும் போது கைத்தொலைபேசிகளை எடுத்துக்கொண்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிளுடன் தப்பிச் சென்றுவிட்டனர்.

தாக்குதலுக்குள்ளான வீட்டு உரிமையாளர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவ இடத்திற்கு சென்ற கிளிநொச்சி தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விற்பனைச் சந்தை



(பரந்தன் குறூப் நிருபர்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் விற்பனைச் சந்தையொன்று நேற்று திங்கட்கிழமை (26) இடம்பெற்றது.

பிரதேச விற்பனைச் சந்தையின் ஆரம்ப நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் சம்பிராதய பூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இதன்போது பல்வேறு உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக் கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோத்தர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். பல்கலையில் திலீபனின் நினைவேந்தல்



யாழ்.விசேட நிருபர்

திலீபனின் 35ஆவது நினைவு தினம், நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப் பட்டது. தீலிபன் உயிர்நீத்த 10.48 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, திலீபனின் உருவப்படத்திற்கு பல்கலைக்கழக சமூகத்தினரால் மலர்மாலை அணிவித்தும் மலர்தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்**

# சஹ்ரானின் சாரதி உட்பட 4 பேர் பிணையில் விடுவிப்பு

மட்டக்களப்பு வவுணதீவில் இரு பொலிஸாரை சுட்டுக்கொலை செய்த சம்பவம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சாரதி உட்பட 4 பேரை நேற்று (26) மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லா தலா ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபா பணமும் 10 இலட்சம் ரூபா இருவர் கொண்ட சரீரப் பிணையிலும் கடவுச் சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு நிபந்தனையுடன் பிணையில் விடுவித்துள்ளார்.

கடந்த 20181129 திகதி வவுணதீவு வலையிறவு பொலிஸ் சோதனைச்சாவடியில் இரு பொலிசாரை துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும் கொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் 2019 ம் ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதல் சம்பவம் தொடர்பாக 2019 ஏப்ரல் 29 ம் திகதி சஹ்ரானின் கார் சாரதியான கபூர் மாமா என்றழைக்கப்படும் சஹீர்

04

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 2019 ஏப்ரல் 03 ஆம் திகதியிடப்பட்டு Australia வைச் சேர்ந்த Notary Public, philip leslie Wyatt முகதாவில் இல.6, ஹார்டன் பிளேஸ், கொழும்பு - 07 யைச் சேர்ந்த மொகமட் ஷாசாத் மொகமட் (தே.அ.அ.இல 591972570X) என்பவரின் பெயரில் இல.20, ஸ்ரீ நாகவிஹார வீதி பிட்டகோட்டேயைச் சேர்ந்த தற்போது Unit A, 332, Ulster Road, Albany Western Australia 6330 இல் வசிக்கும் பியூமி மனுஜா பொன்சேகா ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித்துத்துவப் பத்திரம் 2022 ஜூன் மாதம் 7 ஆம் திகதி முதல் மீளப்பெறுவதோடு இரத்துச் செய்யப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவக்காரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைகும் நான் பொறுப்பாக மாட்டேன்

**பியூமி மனுஷா பொன்சேகா**

**2022 செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி**



















## தேசிய பேரவையில் இணைய தமிழ் கூட்டமைப்பு நிபந்தனை

**இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டுமாம்**



இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் தேசிய பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணையப் போவதில்லை என அதன் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய பேரவையில் இணையாது என பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆகவே இனப் பிரச்சினைகளுக்கான தீர்வினை அரசாங்கம் உடன் முன்வைக்க வேண்டும் என்றும் அதன் பின்னரே முடிவு அறிவிக்கப்படும் என்றும் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் அமைச்சரவையே தற்போது ஆட்சியில்

04

## நாயை காப்பாற்ற தனது உயிரை மாய்த்த பெண்

**பொலன்னறுவை பகுதியில் சோக சம்பவம்**



அயல் வீட்டில் இருந்த வளர்ப்பு நாயை புகையிரதத்தில் மோத விடாமல் தடுக்க முயன்ற 45 வயதுடைய பெண் ஒருவர் குறித்த புகையிரதத்தில் மோதி பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

பொலன்னறுவை, கதுருவெல பகுதியை சேர்ந்த வீரதுங்க ஆராச்சி என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த 17 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த அவர் பொலன்னறுவை பொது

04

## அறிவித்தல்

### நிக்கவரட்டிய பிரதேச சபை

**2023ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு அறிக்கையை பொது மக்கள் பார்வைக்கு வைத்தல்**

வடமேல் மாகாண ஆளுநரினால் 2020.10.29 அன்று வெளியிடப்பட்ட இலக்கம் 2199/15 உடைய அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வரவு - செலவுத் திட்டம் மற்றும் அமுலாக்கல் விதிமுறை இலக்கம் 10(2)ஆ சட்டத்தின் பிரகாரம், 2023ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு அறிக்கை பொது மக்களின் பார்வைக்காக பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் அலுவலக நேரங்களில் அதனைப் பரிசீலனை செய்து கொள்ளலாமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**எம்.பி.பி. பத்திரண**
**தலைவர்**
**நிக்கவரட்டிய பிரதேச சபை**

**2022 செப்டம்பர் 22ஆம் திகதி**


Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams


## டீசல் பவுஸரை கடத்தியவர் கைதாகி விளக்கமறியலில்

**மேலும் இருவரை தேடி பொலிஸ் வலைவீச்சு**



கண்டி ஹந்தானை பகுதியில் வைத்து டீசல் தாங்கி பவுஸர் ஒன்றை கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து ஹந்தானை நோக்கி டீசலை எடுத்துச்சென்ற டீசல் தாங்கி பவுஸரை அதிகாலை இரண்டு மணியளவில் ஹந்தானை சந்தியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் கடத்தியுள்ளனர்.

முச்சக்கர வண்டியில் வருகை தந்த நால்வர் பவுஸரை இடைமறித்து நிறுத்தியதோடு சாரதி மற்றும் நடத்துனரை தாக்கிவிட்டு கடத்தி சென்றுள்ளனர். இந்நிலையில் 119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சந்தேக நபர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் தப்பிச்சென்றுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை புகையிரத சேவைகள்

**PROCUREMENT FOR THE REPLACING PF PLC CONTROLLED FLUSHING SYSTEM WITH NEW TYPE IN TOILETS OF S12 DUMS - SRS/F.7809**

கடன் இல. **IDA-63460**

01. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கமானது உலக வங்கியிடமிருந்து துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கான CERC செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளது என்பதுடன் இதன் ஒரு பகுதியை REPLACING PF PLC CONTROLLED FLUSHING SYSTEM WITH NEW TYPE IN TOILETS OF S12 DUMS - SRS/F.7809 எனும் ஒப்பந்தத்தின் தகுதியான கொடுப்பனவுகளுக்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர், இலங்கை புகையிரத சேவைக்கு REPLACING PF PLC CONTROLLED FLUSHING SYSTEM WITH NEW TYPE IN TOILETS OF S12 DUMS எனும் பெறுகைக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்.
03. சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.
04. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2022-09-27ஆம் திகதி முதல் 2022-10-18ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

தொலைபேசி : 94(11)2438078 அல்லது 94 (11) 2436818
தொலைநகல் : 94 (11) 2432044
மின்னஞ்சல் : dgmp@railways.gov.lk, pot1@railways.gov.lk
இணையதளம் : www.railway.gov.lk

05. தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன: விலைமனுதாரர்கள் தன்னியக்க கைத்தொழில் வேலைகள், அல்லது புகையிரத சேவைக்கு இலத்திரனியல் உற்பத்திகளை வழங்குதலில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது கைத்தொழில் வேலைகளும் ஏற்புடையதாகும். மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.
06. மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவை மட்டும் செலுத்துவதன் பேரில் 2022-09-27ஆம் திகதி முதல் 2022-10-18ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
07. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 25,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.
08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-10-05ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இரத்மலானை, பிரதம இயந்திரவியல் பொறியியலாளர் உப திணைக்களத்தில் இடம்பெறும்.
09 விலைமனுக்கள் 2022-10-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (மேல்நிலை),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10. இலங்கை**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**Ref. No. SRS/F.7809**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மில்கோ (பிறைவட்) லிமிடட்

(அரசுரிமை தொழில் முயற்சி)

இலங்கையில் ''ஹைலண்ட்'' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பால் உற்பத்திகளை தயாரித்தல், பால் பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் அரசு உரிமையுள்ள முதன்மையான அமைப்பே மில்கோ (பிறைவட்) லிமிடட் என்பதாகும். பின்வரும் இயந்திர சாதனங்கள் வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தர அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கேள்விக் குழுவின் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | இயந்திர / உபகரணங்களின் விபரங்கள் | கேள்வி இல. | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் | ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா | விலைக் கோரல் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | காலி பிராந்திய விற்பனை நிலையத்திற்கு 60 KVA ஓசையற்ற (Sound-proof) மின் பிறப்பாக்கியொன்றை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | SQ/2022/P/292 | 18 / 10 / 2022 பி.ப. 3.00 மணி | 1,000.00 | 50,000.00 |
| 2 | திகன பாற் தொழிற்சாலையிலுள்ள ஐஸ் கிறீம் குளிர் அறைக்கு 02 எண்ணிக்கையான குளிர்மையாக்கும் அலகுகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | SQ/2022/P/293 | 18 / 10 / 2022 பி.ப. 3.00 மணி | 2,000.00 | 200,000.00 |
| 3 | திகன பாற் தொழிற்சாலையிலுள்ள உத்தேச பொலியூரிதீன் பெனல்களை (Polyurethane Panels) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | SQ/2022/P/294 | 18 / 10 / 2022 பி.ப. 3.00 மணி | 2,000.00 | 200,000.00 |
| 4 | அம்பேவலை - விசிறி உலர்த்தும் பாற் தொழிற்சாலைக்கு Evaporative Condenser வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | SQ/2022/P/295 | 18 / 10 / 2022 பி.ப. 3.00 மணி | 2,000.00 | 50,000.00 |

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை பின்வரும் வங்கி விபரங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும் (எக்காரணம் கொண்டும் ரொக்கப் பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

வங்கிக் கணக்கின் பெயர் : மில்கோ (பிறைவட்) லிமிடட்
கணக்கிலக்கம் : 004100180210331
வங்கி மற்றும் கிளை : மக்கள் வங்கி கோப்பரேட் வங்கிப் பிரிவு
காரணம் : : **SQ/2022/P/.........** கேள்விக்கான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம்

**பொது நிபந்தனைகள்**

1) முழு விபரங்களுடன் கூடிய கேள்விப்பத்திர ஆவணங்கள்/ விபரங்கள், ஆகியவற்றை மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவான ஐந்தாம் மாடி, இல. 345, காலி வீதி, கொழும்பு-3, என்ற முகவரியில் 2022-10-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00 மணி வரையில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றுடன் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்தியதற்கான வங்கி வைப்பு ரசிது சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் அல்லது வேறு ஆவணங்கள் என்பன கோரிக்கைக் கடிதம் இல்லாமல் வழங்கப்படமாட்டாது.
2) 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு (இயைபுடைய ஒவ்வொரு வகுதிக்கும்) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விலைக் கோரல் பிணை முறி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மில்கோ (பிறைவட்) லிமிட்டட்டின் கொள்வனவுப் பகுதியில் 2022-10-18ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் நேரத்தில் அங்கு சமுகமளித்திருக்கலாம்.
4) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை கொள்வனவுப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5) எவ்வித முன்னறிவிப்புமின்றி எந்தவொரு கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
6) மில்கோ நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் இந்த முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வியில் பங்குபற்ற முடியாது.

இந்த கேள்வி கோரல் பற்றிய மேலதிக தகவல், விபரம் அல்லது விளக்கம், தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-4500530-4.

**தலைவர் - கேள்விக்குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**ஐந்தாம் மாடி, இல. 345, காலி வீதி,**
**கொழும்பு-03.**

**1964 இலக்கம் 28ஐக் கொண்ட காணி எடுத்தற் சட்டத்தின் (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறு, காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

பிரதேச செயலாளரின் குறிப்பிலக்கம்: KDS/KGK/4/2(2)/2018/02/04

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3/12/2018/WS/290

இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி பொது விடயத்திற்காக அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2022.08.17ஆம் திகதி இலக்கம் 2293/28க் கொண்ட ஸ்ரீ லங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் (111)ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - மத்திய மாகாணம் |
| மாவட்டம் | - கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | - கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - வெவதென்ன (274) |
| கிராமத்தின் பெயர் | - முல்லேபிஹில்ல |
| ஆரம்ப வரைபட இலக்கம் | - CM 320385 இலக்கத்தின் 06ஆம் வலயத்தில் 27ஆம் படிவத்தின் காணித்துண்டிலக்கம் 3 |
| காணித்துண்டிலக்கம் | - 1 |
| விஸ்தீரணம் | - 0.0440 ஹெக்டயார் |

**யு.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ. ஜயசிங்ஹ**
**பிரதேச செயலாளர்,**
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.**

**பிரதேச செயலகம்**
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை**
**2022.09.26 திகதி**

# கட்டுப்பாட்டை இழந்த 'கெப்' வாகனம்; இரு வாகனங்களுடன் மோதி மூவர் காயம்



அதிவேகமாக பயணித்த கெப் வாகனமொன்று எதிர்திசையில் இருந்து வந்த முச்சக்கரவண்டி மற்றும் காருடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் (25) மாலை 6.30 மணியளவில் கினிகத்தேன பிரதான வீதியில் கினிகத்தேன அம்பகமுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காரில் பயணித்த இருவர் மற்றும் கெப் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கினிகத்தேனையிலிருந்து நாவலப்பிட்டி நோக்கி அதிக வேகத்துடன் பயணித்த கெப் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, நாவலப்பிட்டியிலிருந்து கினிகத்தேனை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி மற்றும் காருடன் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, முச்சக்கர வண்டியும் கெப் வாகனமும் வயலில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தின் பின்னர், கெப் வாகனத்தின் சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்று நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதுடன், காயமடைந்தவர்கள் அம்பகமுவ பிரதேசவாசிகளின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் மூன்று வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான...

நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது என உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதிபதிகளான புவனேகஅளுவிகார, எல்.டி.பி.தெஹிதெனிய, முர்து பெர்ணான்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எல்.எம்.டி.நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் உள்ளடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்று இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளது.

மேற்படி தீர்மானத்தை அறிவித்துள்ள நீதியரசர் ஜயந்த ஜயசூரிய அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், அரசியலமைப்பின் 35(1) சரத்தின் கீழ் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதற்கான விலக்கு உரித்தாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த சரத்திற்கிணங்க தற்போதைய ஜனாதிபதி பதவியை வகிக்கும் நபருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச தலைவருக்கு தமது உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை தடையில்லாமல் முன்னெடுத்துச் செல்லும் வகையில் அந்த சரத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த தீர்மானத்தின் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 2 கோடியே 23 இலட்சம்...

கொண்டுசென்ற இரண்டு கோடியே 23 இலட்சம் பணத்தை கொள்ளையிட முற்பட்ட இரு நபர்களை தமது உயிரையும் பணயம் வைத்து தம்புத்தேகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள் விற்பனைசெய்யும் தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள வர்த்தக நிறுவனமொன்றின் உரிமையாளரான இவர் அப்பகுதியின் பிரபல வர்த்தகரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் வங்கியில் பணத்தை வைப்பிலிடுவதற்காக இரண்டு பைகளில் அதனை எடுத்துக்கொண்டு அவரது காரில் குறித்த வங்கிக்குச் சென்றுள்ளார். அவர், வங்கிக்கு அருகில் சென்று காரை நிறுத்திய வேளையில் வங்கியின் பாதுகாப்பு அதிகாரி அவருக்கு உதவும் வகையில் அவ்விடத்திற்கு வருகை தந்துள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் முழுமையாக முகத்தை மறைத்திருந்த இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி பணத்தை அபகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பணத்தை பாதுகாத்துக்கொள்வதற்கு அந்த வர்த்தகர் திருடர்களுடன் போராடியபோதும் மரண பயம் காரணமாக அவர் தமது பணத்தை கொடுத்துவிட்டு வங்கிக்குள் பிரவேசித்துள்ளார். சில நிமிடங்களில் திருடர்கள் எந்த சிக்கலுமின்றி 223 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துக்கொண்டு செல்ல முனைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தை அறிந்திராத தம்புத்தேகம பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த வங்கிக்கு அருகில் வருகை தந்துள்ளார்.

அதன்போது, மோட்டார் சைக்கிளுக்கு அருகில் நாணயத்தாள்கள் சில விழுந்திருப்பதைக் கண்டு உடனடியாக அவர் அதில் கவனம் செலுத்தியுள்ளார். அதன்போது பெண்ணொருவர் திருடர்கள் எனச் சத்தமிட்டுள்ளார். அச்சமயம் குறித்த மோட்டார்சைக்கிளுக்கு அருகில் சென்ற புத்திககுமார என்ற அந்த பொலிஸார் தமது உயிரையும் பொருட்படுத்தது திருடர்களுடன் போராடி பணத்தை மீட்டுள்ளார்.

## மின்வெட்டு நேரத்தை மேலும்...

குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சட்டரீதியாக பதிலளிக்கும் என தெரிவித்துள்ள அமைச்சர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் போதியளவு டீசல் மற்றும் எரிபொருள் எண்ணெய் கையிருப்பில் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊட்டச்சத்து குறைபாடுகளை...

பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

உரிய கணக்கெடுப்பின் தரவுகளின் அடிப்படையில் விரைவில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் அமைச்சுக்களுக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று அதிகாலை நாட்டிலிருந்து பயணமாகியுள்ளார்.

அந்த நிலையில் இராஜாங்க அமைச்சர்களை பதில் அமைச்சர்களாக நியமிப்பதற்கு தீர்மானித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனும் நிதி, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் தேசிய கொள்கைகள் பதில் அமைச்சராக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக முதலீட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவும், பதில் தொழில்நுட்ப அமைச்சராக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தும் பதில் மகளிர் சிறுவர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் அனுஷ பெஸ்குவலும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இஸ்லாமிய அறிஞர் யூஸுப் அல்கர்ளாவி காலமானார்



முஸ்லிம் புத்திஜீவிகளுக்கான சர்வதேச யூனியனின் தலைவரும் சுன்னி முஸ்லிம் உலகின் செல்வாக்கு மிக்க சமயத் தலைவர்களில் ஒருவருமான ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவி தனது 96 வது வயதில் நேற்று திங்கட்கிழமை கட்டாரில் காலமானார்.

அவர் காலமானமை குறித்து அவரது ட்வீட்டர் கணக்கில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கட்டார் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளதோடு பல தலைப்புகளில் இஸ்லாமிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய பேரவையில் இணைய... 03ஆம் பக்கத் தொடர்

இருக்கின்றது என்றும் எதிர்காலத்தில் நாட்டின் தீர்மானங்களை அவர்களே எடுப்பார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் தேசிய பேரவை என்று கூறிக் கொண்டு உருவாக்கப்படும் சபையில் அங்கம் வகிப்பதில் எவ்வித பயனும் இல்லை என்றும் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## நாயை காப்பற்ற தனது... 03ஆம் பக்கத் தொடர்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூளைச்சாவு அடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், குறித்த பெண்ணின் உடல் உறுப்புகளான சிறுநீரகம், கல்லீரல் போன்றவற்றை தானமாக அளித்து மேலும் 3 பேரின் உயிரைக் காப்பாற்ற முடியும் என மருத்துவர்கள் அவரது குடும்பத்தினரிடம் தெரிவித்தனர்.

அதன்படி, இவரின் சிறுநீரகம் மற்றும் கல்லீரலை தானமாக வழங்க குடும்பத்தினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

## சஹ்ரானின் சாரதி... 03ஆம் பக்கத் தொடர்

ஆதம்லெப்பை, அப்துல் மனாப் மொஹொமட் பீர்தௌஸ், ஹம்சா மொஹொதீன் மொஹம்மது இம்ரான், ஹய்யாது மொஹமட் மில்ஹான் ஆகிய நான்கு பேரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வு பிரிவினர் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்ததையடுத்து இவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று (26) மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்லா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சிறைச்சாலையில் இருந்து பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டு இவர்கள் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம். முகமட் அமீன், இவர்களை பிணையில் விடுவிக்குமாறு மன்றில் கோரிய நிலையில் இவர்களை எதிர்வரும் ஜனவரி 12ம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு பிணையில் விடுவித்தார்.

## அமைதியாக போராட்டம்...

குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில் அவருக்கு கீழ் உள்ள அமைச்சுக்களை மேற்பார்வையிட பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலம்பெயர் தொழிலாளருக்கு...

நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காகவே நாம் அரசாங்கத்தில் இணைந்து கொண்டோம் என தெரிவித்துள்ளார்.

எமது நடவடிக்கைகளால் நாட்டில் நிலவிய நெருக்கடிகளுக்கு ஓரளவாயினும் தீர்வு காண முடிந்துள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், அதற்கு வெளிநாடுகளில் பணிபுரிவோரின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கே இந்த புதிய ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்வோர் இந்த காப்புறுதி திட்டத்திற்குள் உள்ளடங்குகின்றனர்.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றியுள்ள அமைச்சர்,

எமது எதிர்கால அரசியல் தொடர்பில் சிந்திக்காமல் மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கு தீர்வு காணவே அரசாங்கத்தில் இணைந்து கொண்டோம்.

எமது முயற்சியால் ஓரளவுக்கேனும் நெருக்கடிகளுக்கு தீர்வுகாண முடியுமாக உள்ளது. இதற்கு வெளிநாடுகளில் பணி புரிபவர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். அதற்காகவே அவர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

வெளிநாடுகளில் தொழில்புரிந்துவருபவர்களின் ஓய்வுபெறும் காலத்தை வலுப்படுத்துவதற்காகவே இந்த ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

டொலர் கையிருப்பு இல்லாததால் அந்நிய செலாவணி குறைவடைந்து எமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியது. எரிபொருட்களுக்காக நாட்கணக்கில் வரிசையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் ஒருசிலர் வரிசையில் இருந்து நோய்வாய்ப்பட்டு மரணிக்கவும் நேர்ந்தது.

அத்துடன் இந்த பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கறுப்புச்சந்தை முதலாளிமார் அதிகரித்தனர்.

பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துச் சென்றது.

மக்கள் எதிர்கொண்ட துன்பமான நிலையை பொறுத்துக்கொள்ள முடியாமலேயே மனிதாபிமான அடிப்படையில், எமது எதிர்கால அரசியலையும் கருத்திற்கொள்ளாது அரசாங்கத்துடன் இணைந்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தீர்மானித்தோம்.

எமது இந்த தீர்மானத்தை பலரும் விமர்சிக்கலாம். ஆனால் நாம் அரசியலுக்காக இந்த தீர்மானத்தை மேற்கொள்ளவில்லை. மக்களின் நிலைமையை அறிந்து மனிதாபிமான அடிப்படையிலேயே தீர்மானம் மேற்கொண்டோம் என்றும் மேலும் தெரிவித்தார்.

## தனிஷ் அலிக்கு எதிரான...

நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுலுவல முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குருந்துவத்தை (கறுவாக்காடு) பொலிஸார் மேற்கொண்டு வருவதாக நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, தனிஷ் அலி உள்ளிட்ட சந்தேக நபர்கள் இருவரது கைத்தொலைபேசிகளை கைப்பற்றி விசாரணைக்காக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்ப உத்தரவிடுமாறு விடுக்கப்பட்ட பொலிஸாரின் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## முட்டையின் விலையை ...

படிப்படியாக குறைவடைந்து வரும் நிலையில் முட்டையின் விலைகளை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த சங்கத்தின் செயலாளர் அனுர சிறி குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

சந்தையில் தற்போது முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் அந்த விலையில் மாற்றம் ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் முட்டை விலையில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பில் விசேட பேச்சுவார்த்தையொன்று நாளை 28 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடன் வழங்குவதில் இந்தியா...

மில்லியன் டொலர்கள் கடனை இந்தியா இலங்கைக்கு வழங்கியதன் மூலம் இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்குனராக இந்தியா உருவெடுத்துள்ளது.

இலங்கைக்கு கடன்வழங்கும் செயற்பாட்டில் இந்தியா சீனாவை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தினைப் பிடித்துள்ளது.

20172021 வரையிலான ஐந்து ஆண்டுகளில், சீனா 947 மில்லியன் டொலர்கள் கடனை இலங்கைக்கு வழங்கியதால் இலங்கைக்கு மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்குனராக சீனா முதலிடத்தில் இருந்தது.

சீனா வழங்கிய கடனில் 809 மில்லியன் டொலர்கள் சீனா அபிவிருத்தி வங்கியிடமிருந்து சந்தைக் கடனாகப் பெறப்பட்டுள்ளதாக டெய்லி பைனான்சியல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கான மிகப்பெரிய பலதரப்பு கடன் வழங்குனராக இருந்ததாகவும், 2021 ஆம் ஆண்டில் 610 மில்லியன் டொலர்கள் நிதியை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் சமாதானத்தை கட்டியெழுப்பும் ஆணைக்குழு மற்றும் சமானத்தினை கட்டியெழுப்பும் நிதியம் அறிக்கைகள் மீதான விவாதத்தில், ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருசிரா கம்போஜ், இலங்கைக்கு உணவு மற்றும் நிதி உதவியாக இந்தியா கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர்களை வழங்கியதாக தெரிவித்தார்.

## பொதுஜன பெரமுன அமோக...

பெற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் கம்பளை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் எண்ணிக்கையில் பொதுஜன பெரமுனவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குழு ஆறு பணிப்பாளர் பதவிகளை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

எதிர்க்கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய குழு ஒரே ஒரு பணிப்பாளர் பதவியை மட்டுமே பெற்றுக் கொண்டுள்ளது.

அதற்கிணங்க கம்பளை மற்றும் பாணந்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் இரண்டிலும் பெரும்பான்மையைப் பெற்று பொது ஜன பெரமுன வெற்றி பெற்றுள்ளது.

## இலங்கைக்கு உயிர்காக்கும்...

பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 93.7% அதிகரித்து, கடந்தாண்டு இந்த நேரத்தை விட அரிசி விலை 150% அதிகமாக இருப்பதால், உலகின் ஐந்தாவது பாரிய உணவு விலை பணவீக்கத்தை இலங்கை கொண்டுள்ளது.

ஐ.நா பொதுச் சபையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உடனான சந்திப்பில், இங்கிலாந்தின் பிரபு அஹ்மட் 3 மில்லியன் பவுண்களின் உயிர்காக்கும் மருந்துகளை வழங்கவுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐ.நா நண்பர்கள் மூலம் இந்த நிதி வழங்கப்படும். இது உணவு, விதைகள் மற்றும் பயிர்களை வளர்ப்பதற்கு உதவும் கருவிகள் உட்பட மனநலப் பாதுகாப்பு ஆகியவற்றையும் வழங்கும்.

மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் ஐ.நா.வுக்கான இங்கிலாந்து அமைச்சர் விம்பிள்டன் பிரபு தாரிக் அகமது கூறியதாவது:

இவ்வாறான சவாலான காலத்தை எதிர்நோக்கும் இலங்கை மக்களுக்கு இங்கிலாந்து துணை நிற்கிறது. தற்போதைய நெருக்கடி, உதவி தேவைப்படும் பலரை ஆழமாகப் பற்றியது.

நாங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு □3 மில்லியன் உயிர் காக்கும் ஆதரவை வழங்குகிறோம் மற்றும் இலங்கைக்கு உதவ சர்வதேச பங்காளிகளுடன் தொடர்ந்து பணியாற்றுவோம்.

இந்த புதிய நிதியுதவியானது, இலங்கைக்கு இங்கிலாந்தின் தொடர்ச்சியான ஆதரவின் ஒரு பகுதியாகும். ஐக்கிய இராச்சியம் ஏற்கனவே ஐநாவின் மத்திய அவசரகால பதில் நிதியம் (CERF), உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் ஆதரவை வழங்கி வருகிறது.

2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 1.7 பில்லியனுக்கும் அதிகமான தொகையை CERF க்கு வழங்கியுள்ள ஐக்கிய இராச்சியம், இலங்கைக்கு ஏற்கனவே 5 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைக்க ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் ஒன்றிணைந்த செயற்திட்டத்தின் கீழ் அவசர உதவிகளை வழங்கி வருகின்றன.

## பின்னவல மிருக காட்சிசாலை...

காட்சிசாலையை பார்வையிடுவதற்கு மாலை 5 மணி வரை மாத்திரமே அனுமதி வழங்கப்படுகின்றது.

இதனால் சுற்றுலா பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதோடு, வருமானமும் குறைவடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த மிருகக் காட்சி சாலையை இரவு நேரமும் பார்வையிட காணப்படுகின்ற தடைகள் தொடர்பில் ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்ய அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் இரவு நேரத்திலும் மிருகக்காட்சி சாலையை சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக திறக்கும் பட்சத்தில் 'இரவு சபாரி பூங்கா' என பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## பொதுமக்களது இயல்பு வாழ்வுக்கு...

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ள விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்தகைய சந்தர்ப்பங்களில் தேவைப்படின் பொலிஸாருக்கு நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்க பாதுகாப்பு படையினரும் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கூட்டங்களை நடத்த முடியும். எனினும் சட்டகட்டமைப்பிற்கிணங்க அந்த நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்கனவே அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதனால் அந்தப் பகுதி பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து அதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

எவரும் தமது அன்றாட செயற்பாடுகள் பாதிப்படைவதை விரும்ப மாட்டார்கள். இந்த காரணங்களை கவனத்திற் கொண்டே பொலிஸாருக்கு தாம் அதற்கான

அனுமதியை பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனைவிடுத்து உடனடியாக ஆர்ப்பாட்டங்களையோ ஊர்வலங்களையோ நிறுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை.

பாதுகாப்பு வலயம் என்பது நேற்று இன்று அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இது காலங்காலமாக தொடர்ந்துவரும் முறைமையாகும். சில சந்தர்ப்பங்களில்

நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறான பிரகடனம் மேற்கொள்ளப்படுவதுண்டு. கடந்த காலங்களில் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டனர். அதனால் அரச அதிகாரிகளுக்கு தமது கடமைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

நாட்டின் நிர்வாகம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளம் நிறுவனங்களுக்கு அதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

அத்தகைய சூழ்நிலையில் குறிப்பிட்ட நிறுவனங்களை நாம் பாதுகாக்க வேண்டி உள்ளது. அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்பட இடமளிக்க முடியாது. என்றும் அவர் தெரிவித்தார்.

இவற்றைக் கருத்திற்கொண்டே பாரிய கொழும்பு நகரத்தின் மிகவும் குறுகிய இடங்கள் சிலவற்றை மட்டும் அதிபாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கப்பம் கோரிய சந்தேக நபர்...

கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர், முன்னாள் முதற் பெண்மணி அயோமா ராஜபக்ஷவுக்கு தொடர்ச்சியாக தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு, அவரிடம் 10 இலட்சம் ரூபாவை கப்பமாக கோரியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில், தவறுதலாக குறித்த அழைப்பு வந்திருக்கலாம் என்று எண்ணி, பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வரவினால் சந்தேகநபருக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், அதன் பின்னரும் குறித்த சந்தேகநபர் தொடர்ந்தும் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு கப்பம் கோரியதாகவும், இவ்வாறாக 3 நாட்களில் சுமார் 30 அழைப்புகளை அவர் மேற்கொண்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### மலையக கல்வியை மேம்படுத்தும்

# ஜனாதிபதியின் நம்பிக்கையை வெல்வதில் திடசங்கற்பம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் தெரிவிப்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



மலையகத் தமிழ்ப் பாடசாலைகளை மேம்படுத்தும் பொறுப்பினை வழங்குகின்றேனென்று ஜனாதிபதி என்னிடம் கூறியே கல்வி இராஜாங்க அமைச்சின் நியமனப் பத்திரத்தை என்னிடம் வழங்கினார். ஜனாதிபதியின் அந் நம்பிக்கைக்கமைய எனது முழுக்கவனத்தையும் செலுத்துவேனென்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் குறிப்பிட்டார்.

கல்வி இராஜாங்க அமைச்சருக்கு பதுளை –ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் பதுளை வாழ் மக்களால் நேற்று முன்தினம் (25) மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நிகழ்விலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் 'கல்வி இராஜாங்க அமைச்சின் நியமனப்பத்திரம் எனது கைக்கு கிடைக்கும் வரை இவ் அமைச்சுதான் எனக்கு கிடைக்குமென்று எனக்குத் தெரியாது. சிறிதும் எதிர்பார்க்காத வகையிலேயே கல்வி இராஜாங்க அமைச்சு எனக்கு கிடைத்திருக்கின்றது. நியமனப் பத்திரத்தை என்னிடம் ஜனாதிபதி வழங்கும் போது அவர் என்னிடம் கூறியதற்கமைய எனக்கு பெரும் சுமை இருப்பதை அறிவேன்.

எம்மவர்கள் இந்நாட்டில் கால் பதித்து இருநூறு வருடங்களை அண்மித்துவிட்டது. மலையகத் தமிழ்க் கல்வி வளர்ச்சி தேசிய நிலைக்கு வந்து ஐம்பது வருடங்களாகின்றது. ஆனாலும் பல தசாப்பதங்களாக மலையகக் கல்வி வீணடிக்கப்பட்டு விட்டது.

மலையகத்திலும் பல்வேறு வகையில் உயர்பதவிகளில் எம்மவர்கள் இருப்பதைக் காண முடிகின்றது. ஆனால் எமது மக்களின் விகிதாசாரங்களுக்கமைய மேற்படி உயர் பதவிகள் போதுமானதாக இல்லை. ஆகவே எனது இராஜாங்க அமைச்சர் பதவி 'நிழல்அமைச்சரவை' அந்தஸ்துள்ள அமைச்சாகவே கருதி கங்கணம் கட்டிச் செயல்படவுள்ளேன். கிடைத்திருக்கும் இவ் வாய்ப்பை சரிவரச் செய்வேன்.

கல்வி இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்படும் நிதியை மட்டும் நம்பி நான் செயற்படமாட்டேன். நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பலவகைகளில் வாய்ப்புக்களும் வழிகளும் உண்டு. வெளிநாட்டு தூதரகங்கள், நலன்புரி அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற வகையில் உள்ளன. எமது நம்பகத்தன்மையை வைத்து கோடிக் கணக்கான ரூபாய்களை பெற்றுக் கொள்வதற்கு தயாராகிவிட்டேன். இந்நிதிகளை கல்வி அபிவிருத்திக்கு முழுமையாகப் பயன்படுத்துவேன். அத்துடன் பெருந்தோட்ட பாதையமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏதோ ஒரு வழியில் மேற்கொள்வேன். என்றார்.

# மத்திய மாகாண ஆளுநருடன் ஆஸி. உயர்ஸ்தானிகர் சந்திப்பு



**(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)**

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் (Paul Stephens) மற்றும் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே ஆகியோருக்கிடையில் சிநேகபூர்வ சந்திப்பொன்று கண்டி மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் (21) இடம்பெற்றது.

முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடலின் பின்னர் இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை அடையாளப்படுத்தும் முகமாக நினைவுப் பரிசுகளை பரிமாறிக் கொண்டனர். இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் லாரா ஸ்வீன்சன், மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன, ஆளுநரின் பொது தொடர்பு அதிகாரி, மத்திய மாகாண சபையின் முன்னாள் பிரதித் தலைவர் எஸ். பி. ரத்நாயக்க, மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் மிஹிரன் பண்டார ஆகியோர் இந்த சிநேகபூர்வ சந்திப்பில் கலந்துகொண்டனர்.

(படம்:பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

# கிணற்றிலிருந்து 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் சடலமாக மீட்பு

கந்தப்பளை ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரேம்லி தோட்டத்தில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று முன்தினம் (25) கிணற்றி ல் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த பத்து நாட்களாக வீட்டில் இருந்து காணாமற் போயிருந்த கருப்பையா சரோஜா (வயது 56) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக ஹைபொரஸ்ட் பொலிசார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

இம்மாதம் 15 ஆம் திகதி மேற்படி பெண்மணி தனது வீட்டில் இருந்து காணாமற் போயுள்ளார்.இவரை வீட்டார் தமது உறவினர்களின் வீடுகள் மற்றும் பல இடங்களில் தேடியுள்ளனர்.

அத்துடன் இவர் விடயம் தொடர்பில் ஹைபொரஸ்ட் பொலிசாருக்கும் தெரிவிக்கப்பட்டு பொலிசாரும் விசாரணைகளை மேற்கொண்டு இவரை தேடிவந்தனர்.

இந்த நிலையில் பத்து நாட்களுக்கு பின் தனது வீட்டுக்கு அருகில் உள்ள விவசாய காணியில் அமைக்கப்பட்டுள்ள ஆழமான கிணற்றில் சடலமாக மிதந்த நிலையில் இவர் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளார். ஞாயிற்றுக்கிழமை(25) மதியம் விவசாய காணியில் காணி உரிமையாளர் தண்ணீர் இறைக்க இயந்திரத்தை இயக்கிய போது சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்து பொலிசாருக்கு தெரிவித்துள்ளார். இதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற ஹைபொரஸ்ட் பொலிசார் வலப்பனை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

வலப்பனை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.மோகனராஜன் சம்பவ இடத்திற்கு வந்து மரண விசாரணையை மேற்கொண்டதையடுத்து சடலம் மீட்கப்பட்டு சட்ட வைத்தியர் ஒருவரின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு (25) மாலை அனுப்பிவைக்கப்பட்டது.

அத்துடன் உயிரிழந்த தாய் தொடர்பில் பிரேத பரிசோதனை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் (26) பிற்பகல் இடம்பெற்று பின் உறவினர்களிடத்தில் சடலம் கையளிக்கப்படவுள்ளதாக மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

# கழிவுத் தேயிலைத்தூள் உற்பத்தியால் சீர்கேடு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தேயிலை உற்பத்தியில் தரமற்ற இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்ட கழிவுத் தேயிலைத் தூள் உற்பத்தி அதிகரித்து வருவதாக பாவனையாளர்கள் மற்றும் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

நாட்டில் தற்போழுது நிலவுகின்ற பொருளாதார பின்னடைவு காரணமாக தரமான தேயிலை தூளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளதால் தரம்குறைந்த தேயிலை தூளின் பாவனை அதிகரித்து வருவதா க சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும் தரம்குறைந்த தேயிலைத் தூள் உற்பத்தியாளர்கள் அதிகரித்த கொள்ளை இலாபம் பெற முயற்சிப்பதால் சுண்ணாம்பு உட்பட இரசாயனப் பதார்த்தங்களையும் கலந்து தேயிலைத் தூளை உற்பத்தி செய்வதாகவும் இதனால் சுகாதார சீர் கேட்டை உண்டாக்கும் தேயிலைத் தூளை வருமானம் குறைந்த மக்கள் பாவனைக்கு எடுப்பதாகவும் குறிப்பாக தேயிலை உற்பூத்தியை மேற்கொள்ளும் தோட்ட தொழிலாளர்களுக்கே தரமான தேயிலை தூள் கிடைக்காததால் தரங்குறைந்த தேயிலைத்தூளை தேநீருக்காக பயன்படுத்துவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தேகாரோக்கியத்துக்கும் சுகாதார சீர்கேட்டுக்கும் களங்கமாக விளங்கும் கழிவுத் தேயிலை உற்பத்தியைக் கண்காணிக்க முறையான திட்டங்கள் கண்காணிப்புகள் இன்மையால் இம்முயற்சிகள் பரவலாக இடம்பெ றுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# கொடக்கவெல பிரதேச சபையினால் சிறுவர் நூலகம் திறந்து வைப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

கொடக்கவெல பிரதேச சபையின் சாகித்திய விழா கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று வரை(26) கொடக்கவெல பிரதேச சபை கட்டிடத்தொகுதியில் இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு வெள்ளிக்கிழமை(23) கொடக்கவெல பிரதேச சபை கட்டிடத் தொகுதியில் சிறுவர் நூலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.அத்துடன் புத்தக விற்பனை மற்றும் கண்காட்சி உட்பட சிறுவர்களுக்கான பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் முதிதா சொய்சா, சப்ரகமுவ மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனுர அலகியவன்ன உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.





கல்வி இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுள்ள பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தக்குமாரை வரவேற்கும் நிகழ்வு பசறை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பசறை பிரதேச பெருந்தோட்ட பகுதியை சேர்ந்த தோட்ட தலைவர்கள், இளைஞர், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(மடுல்சீமை நிருபர்)

### உக்குவலை பிரதேச செயலகத்தின்

# இலக்கிய கலை விழா இன்று

**(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)**

உக்குவலை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள உக்குவலை பிரதேச இலக்கியக் கலை விழா இன்று (27) செவ்வாய்க்கிழமை எல்வெல ஸ்ரீ தர்மவர்தனராமய மண்டபத்தில் மு.ப 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலக்கியக் கலை விழாவில் பல கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பிரதேசவாசிகள் அனைவரும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கண்டியில் இன்று நீர்விநியோக தடை

**(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)**

கண்டி கெட்டம்பே நீர் விநியோக சுத்திகரிப்பு நிலையத்தில் அத்தியாவசிய அபிவிருத்தி பணிகள் காரணமாக கண்டியின் சில பிரதேசங்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை (27) மு.ப 9.00 மணி முதல் நாளை (28) புதன்கிழமை மு.ப 9.00 மணி வரை 24 மணித்தியாலங்களுக்கு தற்காலிகமாக நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளதாக கண்டி மாநகர சபை அறிவித்துள்ளது.

கண்டி நகரின் சகல வீதிகளும், ஸ்ரீமத் குடா ரத்வத்த மாவத்தை. பகிரவகந்த, தொடம்வெளை, பிரைம்ரோஸ், அணிவத்த, ஜோர்ஜ் இ.டி. சில்வா மாவத்தை, இரண்டாவது இராஜசிங்க மாவத்தை, பேராதெனிய வீதி, ஹேவாஹெட்ட வீதி, லேவெள்ள, தல்வத்த, பூவலிக்கடை, பீரிஸ்வத்த, அம்பிட்டிய ஆகிய பிரதேசங்கள்

அத்துடன் கண்டி வாவி சுற்றுவட்டம், ரஜபிஹில்ல மாவத்தை, நீர்த்தேக்க வீதி, ஹந்தானை, போகம்பர, நாகஸ்தென்ன, தெய்யன்னவெல, ஹீரேஸ்ஸகல. சுதுகும்பொல, போவெல, தங்கொள்ள, கெட்டம்பே, சரசவி உயன ஆகிய பகுதிகளில் நீர் விநியோகம் 24 மணித்தியாலம் தற்காலிகமாக தடைப்படவுள்ளதாகவும் கண்டி மாநகர சபை தெறிவித்துள்ளது.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 30

## குறள் தரும் சிந்தனை



கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார்

ஆன்றோர் நிறைந்த அவையில் பேசுவதற்கு அஞ்சுகின்றவர்கள், எத்தனை நூல்களைக் கற்றிருந்த போதிலும், அவர்கள் கல்லாதவர்களைவிட இழிவானவர்களாகவே கருதப்படுவார்கள்.

# இளம்பராயத்தினருக்கு சவாலாக அமைந்துள்ள போதைப்பொருள்!

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் இலங்கை எதிர்கொண்டுள்ள முக்கிய சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாக போதைப்பொருட்கள் பாவனை விளங்குகின்றது. ஆனால் போதைப்பொருட்கள் உடல், உள ஆரோக்கியத்திற்கும் சமூகத்திற்கும் மாத்திரமல்லாமல் நாட்டுக்குமே தீங்கு விளைவிக்கக் கூடியனவாகும். இது நன்கு நிரூபிக்கப்பட்டுள்ள உண்மையும் கூட.

அப்படியிருந்தும் சட்டவிரோதமான முறையில் போதைப்பொருட்கள் நாட்டுக்குள் வந்து சேருவதும், அதன் விற்பனையும், பாவனையும் மாத்திரமல்லாமல் போதைப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட குற்றங்களும் அதிகரித்தே காணப்படுகின்றன.

கைப்பற்றப்படும் சட்டவிரோத போதைப்பொருட்களின் அளவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு உட்பட போதைப்பொருள் விற்பனையிலும் பாவனையிலும் ஏற்பட்டுள்ள அதிகரிப்புகளும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

அந்த வகையில் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் மாத்திரம் 11 இளைஞர்கள் ஹெரோயினுக்கு அடிமையாகி உயிரிழந்துள்ளனர். இதன்படி ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனை யாழ்ப்பாணத்தில் எவ்வளவு தூரம் அதிகரித்துக் காணப்படுகிறது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஹெரோயின், ஐஸ், மர்ஜுவானா எனப் பல பெயர்களில் காணப்படும் போதைப்பொருட்கள் இளம் பராயத்தினரை இலக்காகக் கொண்டுதான் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாகவும் விற்பனை செய்யப்படுவதாகவும் பொலிஸாரின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இற்றைக்கு இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தலைநகரில் காணப்பட்ட இப்போதைப் பொருட்களின் பாவனை இன்று நாடெங்கிலும் கிராம மட்டம் வரையும் வியாபித்துள்ளது. இவற்றின் பாவனைக்கு உள்ளாகி இருப்பவர்களில் பெரும்பகுதியினர் இளம் பராயத்தினராக இருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

இந்நாட்டில் போதைப்பொருட்களின் வருகை, விற்பனை, பாவனை என்பவற்றில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளது போன்று உடல், உள ரீதியிலான உபாதைகளுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு சிகிச்சை அளிக்கவென வருடாவருடம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டிய நிலைக்கும் நாடு முகம் கொடுத்துள்ளது. இதனை சுகாதாரத் துறைத் தரவுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அதேநேரம் போதைப்பொருட்களின் காரணமாக எத்தனையோ குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகிப் போயுள்ளன. எத்தனையோ குடும்பங்கள் வறுமையின் பிடிக்குள் வலிந்து தள்ளப்பட்டுள்ளன. எத்தனையோ குடும்பங்கள் தெருவுக்கு வந்துள்ளன. போதைப்பொருட்களின் மூலம் தனிநபருக்கோ, சமூகத்திற்கோ, நாட்டுக்கோ எந்த நன்மையுமே கிடைப்பதில்லை. மாறாக அவற்றின் விளைவுகள் அனைத்துமே பாதிப்புகள் நிறைந்தவையாகும். போதைப்பொருட்கள் இளம் பராயத்தினருக்கே பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

தனிநபருக்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பெரும் பாதிப்புகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியதாக விளங்கிக் கொண்டிருக்கின்ற போதிலும், போதைப்பொருட்களை விற்பனை செய்பவர்களதும் பாவிப்பவர்களதும் எண்ணிக்கை குறைந்ததாக இல்லை.

இந்நிலையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ, 'முக்கிய போதைப்பொருள் வர்த்தகர்களைக் கைது செய்யாமல் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையை ஒரு போதும் குறைக்க முடியாது என்றும், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை விரைவுபடுத்தப்பட்டுள்ளதால் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது சிறைச்சாலைக் கட்டமைப்புக்கு சுமக்க முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது முற்றிலும் உண்மையானதாகும். போதைப் பொருள் பாவனையாளர்கள் அதிகளவில் கைது செய்யப்படும் போது சிறைச்சாலைக் கட்டமைப்பினால் சுமக்க முடியாத நிலை ஏற்படுவது இயல்பானதே. போதைப்பொருள் பாவனையாளர்களைக் கைது செய்து சிறை வைப்பதன் மூலம் இப்பிரச்சினையை முடிவுககு கொண்டு வந்துவிட முடியாது. இதற்கு கடந்த கால அனுபவங்கள் நல்ல எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

அதனால்தான் போதைப்பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படும் மூலங்களையும் அவற்றின் விற்பனையையும் கட்டுப்படுத்தவென அவற்றுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களைக் கைது செய்ய வேண்டும் என்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வாறான நடவடிக்கையின் ஊடாக நாட்டுக்குள் போதைப்பொருட்கள் வந்து சேர்வதும் அவற்றின் விற்பனையும் பெரிதும் வீழ்ச்சி அடைய முடியும். அதன் விளைவாக போதைப்பொருள் பாவனையாளர்கள் அதனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு உள்ளாகி அதன் பாவனையைக் கைவிடும் நிலைக்கு உள்ளாவர். அதுவே போதைப்பொருள் பாவனையாளர் வாழும் ஒவ்வொரு குடும்பத்தினரதும் வேணவாவாகும்.

ஆகவே போதைப்பொருட்கள் அற்ற நாட்டையும் அவற்றைப் பாவிக்காத சமூகத்தையும் உருவாக்க இவ்வாறான ஏற்பாடுகள் பின்புலமாக அமையும். அவ்வாறான தனிநபர்களின் உருவாக்கமே ஆரோக்கியமான சமூகத்திற்கு அடித்தளமாக இருக்கும். அதுவே இன்றைய அவசியத் தேவையாகவும் உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# தீயகுணங்களை உள்ளத்திலிருந்து நீக்க நவராத்திரி வழிவகுக்கட்டும்!

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் வரும் வளர்பிறைப் பிரதமை நாள் முதல் நவமி நாள் வரையுள்ள ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்வாண்டு புரட்டாதி மாத வளர்பிறைப் பிரதமை 26 ஆம் திகதி (நேற்று) யோகத்தில் ஆரம்பமாகி ஒக்டோபர் 04 ஆம் திகதி விஜயதசமி மற்றும் கேதாரகௌளரி விரதத்தின் தொடக்க நாளில் நிறைவடைகின்றது ,

பத்து நாட்கள் வருகின்ற நவராத்திரியில் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதிக்கு கும்ப பூசை விசேடமாக இடம்பெறும். இப்பூஜையானது மூன்று தேவியருக்கும் செய்யப்படுகின்றது. சரஸ்வதிக்குரிய தினங்களை மூலநட்சத்திர நாளில் ஆரம்பித்து திருவோண நட்சத்திர நாளில் நிறைவு செய்ய வேண்டும்.

மகிஷாசூரனை அழிப்பதற்காக அம்மன் ஒன்பது நாள் போர் செய்து பத்தாம் நாள் வெற்றி பெற்றாள். மகிஷம் என்றால் எருமை. இது சோம்பல் மற்றும் அறியாமையின் சின்னமாகும்.

அறியாமையை அழித்த அம்பிகைக்கு புரட்டாசி மாதம் பிரதமை திதியிலிருந்து ஒன்பது நாள் விழா கொண்டாடப்படுகிறது. இந்த நாட்களில் நம்மைச் சூழ்ந்துள்ள அறியாமை என்னும் இருள் விலக அம்பிகையை இரவு நேரத்தில் பூஜை செய்கிறோம். நவராத்திரியின் சிறப்பாக கொலு வைத்தல் அமைகின்றது.

இருள் விலகி ஒளி பிறந்த பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடுகிறோம். ஒரு நாளில் பகல் என்பது சிவனின் அம்சமாகவும் இரவு என்பது அம்பிகையின் அம்சமாகவும் கருதப்படுகிறது. பகலும் இரவும் இல்லாவிட்டால் நாள் என்பது கிடையாது. இரவெல்லாம் விழித்திருந்து உலகைக் காக்கும் அம்பிகைக்காக ஒன்பது நாள் இரவு மட்டும் திருவிழா கொண்டாடப்படுகிறது என்பர்.

படைத்தல், காத்தல், அழித்தல் அனைத்துக்கும் மூலமாக இருப்பவள் தேவியே. பரம சுகத்தையும், நீண்ட ஆயுளையும், சுபிட்சம் பெற வகை செய்யும் அனைத்துச் செல்வங்களையும் அருள்பவள் அவளே. முத்தொழில் புரியும் மும்மூர்த்திகளும் வணங்கும் பரம்பொருள் பராசக்தியே. தினமும் அம்பிகையை வணங்கினாலும் புரட்டாசியில் வரும் நவராத்திரியில் வணங்குவது மிகுந்த பலனை அளிக்கும். புரட்டாசி மாதப் பிரதமை முதல் நவமி வரை நவராத்திரி காலமாகும்.



முக்குணங்களுக்கும் மூலமான சர்வலோக நாயகியை ஒன்பது நாட்களும் பூஜிக்கும் போது, முதல் மூன்று நாட்கள் துர்கா பரமேஸ்வரியையும் அடுத்த மூன்று நாட்கள் மகாலட்சுமியையும், கடைசி மூன்று நாள்கள் சரஸ்வதியையும் வணங்க வேண்டும்.

கல்வி,இசை,புகழ்,செல்வம்,தானியம்,வெற்றி, தண்ணீர் ஆகிய அனைத்தையும் சக்தியே தருகிறாள். ஆதி பராசக்தியை துர்க்கையாக நினைத்து வழிபட்டால் பயம் நீங்கும்.லட்சுமி வடிவில் தரிசித்தால் செல்வம் பெருகும். சரஸ்வதியாக எண்ணி வணங்கினால் கல்விச்செல்வம் சிறக்கும். பார்வதியாக வழிபட்டால் ஞானப்பெருக்கு உண்டாகும். எனவே தான் இந்நாட்களில் கொலுவும் வைக்கிறார்கள். தேவியை நடுவில் வைத்து, இந்த உலகப்பொருட்களை எல்லாம் சுற்றிலும் வைக்கிறார்கள்.

இதற்குக் காரணம், தேவியால் தான் இந்த உலகம் இயங்குகிறது என்பதைக் காட்டுவதற்காக ஆகும். பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் ருத்திரன், சதாசிவன் ஆகிய சிவனின் மற்ற வடிவங்களும் சரஸ்வதி,லட்சுமி, பார்வதி, மகேஸ்வரி, மனோன்மனி ஆகிய சக்திகளுக்குள் அடக்கமாக உள்ளனர்.

எனவே சக்தியை வழிபட்டாலே அனைத்து தெய்வங்களையும் வழிபட்டதாக அர்த்தம். அலைமகள், மலைமகள், கலைமகள் ஆகிய மூவரின் முன்னிலையில் தான் 9 நாட்களிலும் விரதம் மேற்கொள்கின்றனர். விரதம் மேற்கொள்ளும் போது மனிதர்களின் தீய குணங்களான வெறுப்பு, பொறாமை, அறியாமை,பேராசை,போன்ற அனைத்து குணங்களையும் மனதில் இருந்து நீக்கிவிட வேண்டும்.

நடராஜன் ஹரன்
(பனங்காடு)

# ஐ.நாவுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதே இலங்கையின் எதிர்பார்ப்பு

## நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77 ஆவது அமர்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும், இலங்கைத் தூதுக்குழுவின் தலைவருமான அலி சப்ரி ஆற்றிய உரை

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் உலகத் தலைவர்களை ஒன்றுகூடுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் 77 ஆவது அமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் நான் பெருமைப்படுகின்றேன். தற்போதைய அமர்வின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சபா கோரோசி அவர்களை வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றேன். தலைவர் அவர்களே, எதிர்வரும் வருடத்தில் உங்களுடனும் உங்கள் குழுவுடனும் நெருக்கமாக பணியாற்றுவதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளது.

சவால்கள் நிறைந்த உலகளாவிய பின்னணியில்தான், கடந்த ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் பின்னர் இலங்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாம் எதிர்கொள்ளும் வெளியக மற்றும் உள்ளக சவால்கள் அரசியல், சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதுடன், இது எமது மக்களுக்கு மீட்பு மற்றும் செழிப்புக்கு வழிவகுக்கும். அனைத்து இலங்கையர்களுக்கும் மிகவும் நியாயமான, நிலையான மற்றும் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான 'சிறந்ததை மீளக் கட்டியெழுப்பும்' ஒரு சந்தர்ப்பம், எதிர்காலத்திற்கான எமது கூட்டுப் பார்வையை நனவாக்குவதற்கான தருணம் இதுவென இலங்கை நம்புகின்றது. இந்தப் பயணத்தைத் தொடங்கும் போது ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.



நாட்டில் நீடித்த சமூக அமைதியின்மை மற்றும் எதிர்ப்புகளைத் தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த மாதம் பாராளுமன்றத்தில் ஆற்றிய தனது கன்னி உரையில், 'தேசம் கோரும் சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை நான் செயற்படுத்துவேன்' எனக் குறிப்பிட்டிருந்ததை நான் மேற்கோள் காட்டுகின்றேன். இந்த நடவடிக்கைகளில் தற்போதைய நடைமுறைகளின் மீளாய்வு, ஜனநாயக நிர்வாகத்தின் நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நீண்ட கால பொருளாதார ஸ்திரத் தன்மையை மீட்டெடுப்பதற்கான அவசர நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வது ஆகியவை அடங்கும். நிதி ஒழுக்கம் மற்றும் தொலைநோக்குப் பொருளாதார மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை கண்டிப்பாக கடைபிடித்தால் மட்டுமே இது சாத்தியமாகும் என்பதை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம்.

**கடுமையான சவால்கள் இருந்தபோதிலும், நிலையான அபிவிருத்தி குறித்த 2030 நிகழ்ச்சி நிரலை அடைவதற்காக நாங்கள் முயற்சிப்போம்!**

சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர்கள் மட்டத்தில் புரிந்துணர்வை எட்டியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துள்ளதுடன், இந்தப் பொருளாதார சீர்திருத்தங்கள் அவர்களின் வாழ்க்கையில் குறைந்தபட்ச தாக்கத்தை ஏற்படுத்துவதை உறுதிசெய்ய முயற்சிப்போம்.

கருத்துச் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமை ஒருவருக்கு உள்ளது என்பதை நாங்கள் நிபந்தனையின்றி அங்கீகரிக்கின்றோம்.

கொவிட்19 இன் மனித ஆரோக்கிய பாதிப்பைக் கட்டுப்படுத்துவதில் இலங்கையின் நாடு தழுவிய மூலோபாயம், அரசாங்கத்தின் முன்முயற்சி மற்றும் பாரபட்சமற்ற நடவடிக்கைகள் மற்றும் எமது வலுவான சுகாதாரப் பாதுகாப்பு உட்கட்டமைப்பின் பயனுள்ள விநியோகத் திறன்களின் விளைவாக பெரும்பாலும் வெற்றிகரமாக உள்ளது என்பதை இந்த மாநாட்டில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது தடுப்பூசி இயக்கம் உலக சுகாதார அமைப்பின் இலக்குகளை மீறியது. எவ்வாறாயினும், அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாடாக நாம் தொற்றுநோயின் பொருளாதார வீழ்ச்சிக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருந்தோம். கடல்களில் ஏற்படும் மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து நாங்கள் மிகுந்த அக்கறையுடனும், உணர்திறனுடனும் இருப்பதை நீங்கள் பாராட்டுவீர்கள். 2030 இற்குள் உலகம் 'பூஜ்ஜிய பட்டினி' யை அடைந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்ட மைற்கற்களை எட்டாமல் போகும் வாய்ப்பு உள்ளது. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு பெரும் ஆபத்தில் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கை அறிகுறிகள் குறித்து இலங்கை தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. விவசாயத்தை நவீனமயமாக்கப்பட்ட துறையாக நிலையான மாற்றத்தை இலங்கை ஆதரிப்பதுடன், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேம்படுத்தப்பட்ட உணவு உற்பத்தியை ஊக்குவிக்கின்றது. எந்தவொரு குடிமகனும் உணவுத் தேவைக்காக துன்பப்படக்கூடாது, எந்தவொரு குழந்தையும் போசாக்கின்மைக்கு பலியாகிவிடக் கூடாது என்ற இரு நோக்கங்களுடன் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை இலங்கை ஆரம்பித்துள்ளது.

அனைவருக்கும் தரமான கல்வி மற்றும் சுகாதாரத்தை வழங்குவது, இலங்கையின் சமூகப் பாதுகாப்புக் கொள்கைகளின் மையத்தில் உள்ளது என்பதுடன், கொவிட் 19 தொற்றுநோயின் போது 'உலகளாவிய கற்றல் நெருக்கடியின்' விளைவுகளைத் தணிக்க இலங்கை முடிந்த அடித்தளத்தை வழங்கியது.

கடுமையான சவால்கள் இருந்தபோதிலும், நிலையான அபிவிருத்தி குறித்த 2030 நிகழ்ச்சி நிரலை அடைவதற்காக நாங்கள் முன்னெடுத்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பராமரிப்பதற்கு முயற்சிப்போம். எமது முயற்சிகள் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் நிலையான அபிவிருத்தி இலக்குத் தரவுகள் கிடைப்பதற்கான முன்னணி செயற்பாட்டில் உள்ளதுடன், இதனால் இலங்கையின் சான்றுகள் எதிர்காலத்தில் நிலையான அபிவிருத்திக்கான அறிவிக்கப்பட்ட கொள்கை வகுப்பை மேம்படுத்துகின்றன.

இருப்பினும், தற்போதைய சவால்கள் முன்னேற்றத்தை சீர்குலைத்துள்ளதாக நாங்கள் கவலைப்படுகின்றோம். உலகளாவிய பாதுகாப்பு குறித்த ஒரு வார்த்தை சொல்கின்றேன். நாடுகளிடையே புவிசார் அரசியல் பதற்றங்கள் அரசுகளிடையே பாதுகாப்பின்மை மற்றும் துருவமுனைப்பை உருவாக்கியுள்ளன. ஆயுதக் கட்டுப்பாடு, கட்டுப்பாடற்ற தன்மை மற்றும் நிராயுதபாணியாக்கத்திற்கான ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டமைப்புக்கள் சிதைவடையக்கூடியதாகி விட்டன. சமீபத்தில் நிறைவடைந்த உலகளாவிய அணு ஆயுதக் குறைப்பு மற்றும் பரவல் அல்லாத ஆட்சியின் மையப் பகுதியாக இருந்த அணு ஆயுதங்களை பரப்பாமை குறித்த 10வது மீளாய்வு மாநாட்டில், இது குறித்த ஒருமித்த தீர்மானத்திற்கு நாங்கள் மீண்டும் வரவில்லை.

சமகால சவால்களை நாங்கள் நிவர்த்தி செய்யும் போது, பலஸ்தீனத்தின் நீடித்த பிரச்சினையை நாம் மறந்துவிடக் கூடாது. பலஸ்தீனிய மக்களுக்கு அவர்களின் பிரதேசத்திலும், அரசிற்கும் இயற்கை வளங்களுக்கு முறையான மற்றும் தவிர்க்க முடியாத உரிமை உண்டு என்ற இலங்கையின் நிலையான மற்றும் கொள்கை ரீதியான நிலையை மறுபரிசீலனை செய்கையில், பலஸ்தீனிய மற்றும் இஸ்ரேலிய மக்களின் நியாயமான பாதுகாப்புக் கவலைகளையும், இரு அரச தீர்வை அடைவதற்கான ஐ.நா. தீர்மானத்தின் அடிப்படையில் இந்த விடயத்தின் அவசரத் தீர்மானத்தையும் நாங்கள் மேலும் அங்கீகரிக்கின்றோம்.

பயங்கரவாதத்தின் துன்பத்தை நான் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும். இலங்கை பல தசாப்தங்களாக பயங்கரவாதத்திற்கு பலியானது. பயங்கரவாதிகளின் இலக்குகளைத் தேர்ந்தெடுப்பது, நிதி மற்றும் தீவிரமயமாக்கல் முறைகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை ஆயுதங்களாகப் பயன்படுத்துவது தொடர்ந்தும் உருவாகி வருகின்றது. வன்முறைத் தீவிரவாதத்திற்கு வழிவகுக்கும் தீவிர சித்தாந்தங்களை எதிர்ப்பதற்கும், பயங்கரவாதிகளின் இணையம் மற்றும் சமூக ஊடகத் தளங்களின் பயன்பாடு மற்றும் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் சட்டமன்ற நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் வழிமுறைகள் முன்வைக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், இளைஞர்களின் விமர்சன சிந்தனைத் திறனை வளர்ப்பது, சமூகப் பிணைப்புக்களை வலுப்படுத்துவது, குடிமைப் பொறுப்புணர்வை வளர்ப்பது மற்றும் பயங்கரவாதத்திற்கு வழிவகுக்கும் வன்முறைத் தீவிரவாத சித்தாந்தத்தின் விளைவுகளையும் தாக்கங்களையும் தணிப்பதற்கான சமூகப் பின்னடைவை உருவாக்குவது ஆகியனவும் மிகவும் அவசியமாகும்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கான எமது பங்களிப்பாக, ஐ.நா. அமைதி காக்கும் படையினராக பணியாற்றுவதற்காக தொழில்முறை ஆண்கள் மற்றும் பெண்களுடன் ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளில் எமது பங்களிப்பை மேம்படுத்த இலங்கை எதிர்நோக்குகின்றது. பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் எதிர் கிளர்ச்சி நடவடிக்கைகளில் அனுபவத்துடன், இலங்கை அமைதி காக்கும் படையினர் பயிற்சி பெற்றுள்ளனர் என்பதுடன், மனித உரிமைகளின் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அமைதி காக்கும் அனைத்து செயற்பாடுகளைப் பற்றிய தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவு கொண்டவர்கள் என்பதையும் உறுதிப்படுத்த நாங்கள் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அனைத்து நாடுகளுடனான நட்பின் அடிப்படையில், மாறுபட்ட கருத்தியல் மற்றும் சமூக அமைப்புகளைப் பொருட்படுத்தாமல், ஒரு சுயாதீன வெளியுறவுக் கொள்கைக்காக, இலங்கையை ஒரு சோசலிச ஜனநாயகத்தின் வழியில் எமது மறைந்த பிரதமர்களில் ஒருவரின் கருத்தான 'நாங்கள் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் நான் சொன்னது போல், இது நம் நாட்டின் விருத்திக்கு மிகவும் பொருத்தமானது. மற்றவற்றிலிருந்து, இன்று மாறிவரும் உலகின் பின்னணியில், நம் மக்களுக்கு ஏற்ற சமூகத்தின் ஒத்திசைவான வடிவம் உருவாக்கப்படும் வரை இந்தப் பக்கத்திலிருந்து சில யோசனைகளையும் கொள்கைகளையும் நாம் பெற விரும்புகின்றோம். அதனால்தான் ஆற்றலின் இந்தப் பக்கத்திலோ அல்லது அந்தப் பக்கத்திலோ நாம் நம்மைக் கொண்டிருக்கவில்லை' என்பதை மேற்கோள் காட்ட விரும்புகின்றேன்.

இங்கு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட 193 நாடுகள் நீதியை நிறுவுவதற்கும், சமாதானத்தை பராமரிப்பதற்கும், முன்பைப் போல சிக்கலில் இருக்கும் உலகில் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கின்றன என்பது குறித்து குறிப்பிடுவதற்கு என்னை அனுமதிக்கவும். குடியரசின் அரசியலமைப்பின் எமது உச்சச் சட்டத்தையும் ஏனைய உள்நாட்டு சட்டங்களையும் உள்ளடக்கிய சர்வதேச சட்டத்தின் ஒரு சாசனம் மற்றும் ஒரு வல்லமைமிக்க அமைப்பு எங்களிடம் உள்ளது. இந்த அதிநவீனங்கள் அனைத்தும் இருந்தபோதிலும், பன்முக சவால்கள் உள்ளன என்ற உண்மையை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இந்த சவால்களை சமாளிக்க இலங்கை அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

அந்த உறுதிப்பாட்டிற்காகவே இலங்கை இன்று உறுதியளிக்கிறது. அந்த உண்மையான நம்பிக்கையில் கையில் இருக்கும் நெருக்கடியிலிருந்து யை நாங்கள் மீண்டெழுவோம், சிறப்பாக நாட்டைக் கட்டியெழுப்புவோம், யாரையும் விட்டுவிடாமல், சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்தின் புதிய எல்லைகளை நோக்கி எழுந்து நிற்போம்.

# சந்தோஷத்தின் காரணமான மரியாள்



“எங்கள் சந்தோசத்தின் காரணமே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் " என மாதாவுக்கான பிராத்தனையில் நாம் செபித்து வருகின்றோம். ஆனால் அந்தச் சந்தோஷத்தின் காரணங்கள் என்ன என தியானித்துப் பார்த்தால் விவிலியத்தில் தக்க ஆதாரம் எமக்கு கிடைக்கும்.

மரியாளின் உடனிருப்பையும் அதன் மகிழ்ச்சியையும் எடுத்துரைக்க மூன்று முக்கிய விடயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**எலிசபெத் மரியாள் சந்திப்பு:**

லூக்கா நற்செய்தி முதல் அதிகாரத்தில் ஒரு மகிழ்ச்சிகரமான உண்மையை உணரலாம்.

மரியாளுக்குக் கபிரியேல் வானதூதர் அருளிய வாக்குகளின்படி எலிசபெத் கருத்தாங்கியிருப்பது மாபெரும் அதிசயம். மரியாள் ஆவியானவரின் தூண்டுதலால் 70 வயது மூதாட்டியைச் சந்திக்கச் சுமார் 120 கிலோமீட்டர் தூரத்திலுள்ள யூதேய மலைநாட்டிற்கு கால்நடையாகச் செல்கின்றார்.

தானும் ஒரு கர்ப்பிணி என்பதைக் கூட பொருட்படுத்தாமல் அன்னையின் கரிசனையோடு எலிசபெத்தை சந்திக்கின்றார்.

யூதர்கள் குல முறைப்படி ஒருபெண் அதுவும் திருமணத்திற்கு முன்பே கருத்தாங்கிய பெண் வெளியே செல்வது ஏற்றுக்கொள்ள முடியாத காரியம். கருத்தாங்கிய இருவர் அதுவும் 70 வயதும் 18 வயதும் சந்திப்பது என்பது எந்தளவு அற்புதமானது. அந்த சந்திப்பு எத்தகைய மகிழ்ச்சியைத் தந்திருக்கும் உண்மையில் அது கற்பனைக்கு எட்டாத ஓர் அதிசயம்.

ஆண்டவரின் தாயார் தன்னிடம் வருவதைக் கண்ட எலிசபெத் மகிழ்ச்சியிலும் ஆச்சரியத்திலும் மரியாளை வரவேற்க வந்தகாட்சி அற்புதமும் மகிழ்ச்சியும் நிறைந்ததாகும்.

**இந்த மகிழ்ச்சியின் காரணம் மரியாளின் அர்ப்பண அன்புதான்**

இருவரும் ஒருவரையொருவர் வாழ்த்தவும் எலிசபெத்தின் வயிற்றில் உள்ள குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியதும், ஆவியானவரின் அருள்பொழிவு பெற்றதும் அங்கே நிறைவான மகிழ்ச்சியைத் தந்தது.

எலிசபெத்தின் பயம் நீங்கி சந்தோஷம் நிறைகிறது. அதன் கனியே மரியாளின் பாடலாக ஒலிக்கிறது. மரியாளின் உடனிருப்பு, நிறைவு, ஆவியின் அருள்பொழிவு என பல மகிழ்ச்சியான நிகழ்வுகளை காணலாம்.

இது தான் நம் சந்தோஷத்தின் முதல் பதிவு.

**அடுத்தது கானவூர் திருமணம்:**

கானவூர் திருமணத்திற்கு இயேசுவுடன் மரியாள் செல்கிறார். மணவீடு என்பது மகிழ்ச்சியின் எல்லைகள் இருக்கவேண்டிய இடம்.

ஆனால் திராட்சை இரசம் பற்றாக்குறையால் சோகமாய் மாறுகிறது. இதனை உணர்ந்த மரியாள் மணவீட்டாரின் துன்பத்தில் பங்கு கொள்கிறார்.

அங்கே மகிழ்ச்சி நிறைந்திட எழுந்தார். மகனிடம் சென்றார். அங்கு முதல் அற்புதம் நிகழ்ந்திட வழிசமைத்தார்.

அன்னை மரியாள் பணியாளரிடம், "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்றார். இறைமகனும் அன்னையின் பரிந்துரையை உணர்ந்தார்.

கற்சாடியிலுள்ள தண்ணீர் இயேசு தொட்ட மாத்திரத்தில் இரசமாகியது. எங்கும் கிடைக்காத இனிய திராட்சைஇரசத்தை அன்னையின் பரிந்துரையில் பெற்றார்கள் அந்த மணவீட்டார்கள். சோகம் நிறைந்த இடத்தில் மகிழ்ச்சி நிறைவது அன்னையின் உடனிருத்தலே.

அது சந்தோஷத்தின் இரண்டாவது பதிவு.

**ஆவியானவரின் அருள்பொழிவு:**

உயிர்த்த இயேசு வானகம் சென்றபின் சீடர்கள் அஞ்சி நடுங்கியவர்களாய் ஒரு வீட்டின் மாடி அறையில் தங்கியிருந்தனர். அன்னை மரியாளும் அவர்களுடன் இருந்தார். வெளியே செல்வதற்கும் பயம் எங்கே தங்களையும் கொன்றுவிடுவார்களோ என்று அவர்கள் அஞ்சினார்கள். இயேசுவின் உடனிருப்பு இல்லாததால் சோகமே உருவாய் காணப்பட்டார்கள். அனைவரும் ஒன்றாய் செபத்தில் கூடியிருந்தபோது ஆவியானவர் நெருப்பு வடிவில் வந்து பெரும் அருள்பொழிவைச் செய்கிறார். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத்தொடங்கினார்கள். சோகம் மறைந்து மகிழ்ச்சியும் கோழையாக இருந்தவர்கள் தைரியமும் பெற்றனர்.

சந்தோஷத்தின் மூன்றாவது பதிவு இதுவாகும். நமது உண்மையான சந்தோஷத்தில் மரியாளின் உடனிருப்பின் பங்கு எந்தளவு என்பதை திருச்சபை விவிலியச் சான்றுகளுடன் நிரூபித்துள்ளது. அன்னையின் கரம் பற்றி இறைமகன் இயேசுவைப் பின்பற்றி வாழ்க்கை முழுவதும் பயணிப்போம்.

சகோதரி லூர்து ஐஸ்வர்யா...

வாரம் ஒரு புனிதர்

## ஐந்து காய வரம் பெற்ற

# புனித பாத்ரே பியோ



*1968ஆம் ஆண்டு செப்டம்பர் 23ஆம் திகதி இறைபதமடைந்த அருட்பணி பாத்ரே பியோ அவர்கள் 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி புனிதராக அறிவிக்கப்பட்டார்.*

*இத்தாலிய கப்புச்சின் துறவு சபை அருட்பணியாளரான புனித பாத்ரே பியோ அவர்கள் பக்தி மற்றும் பிறரன்பு வாழ்வால் மக்கள் மனங்களைக் கவர்ந்தவர். ஐந்து காய வரத்தையும் பெற்றிருந்தவர் இவர்.*

*1887ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி இத்தாலியில் விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த புனித பாத்ரே பியோ சிறு வயதிலேயே பக்தியில் வளர்ந்தவர். தவத்தின் மீதுள்ள ஆர்வத்தால் கல் தரையில் இவர் படுத்தபோது அவரது தாய் அவரைக் கண்டித்துள்ளார்.*

*Francesco Forgione என்ற திருமுழுக்குப் பெயரைக்கொண்டிருந்த இவர், தனது 15ஆவது வயதில் கப்புச்சின் துறவு சபையில் சேர்ந்தார்.*

*திருத்தந்தை முதலாம் பயஸ் அவர்கள் மீதுள்ள மதிப்பால் "Pio" என்ற பெயரை இவர் ஏற்றார். அத்திருத்தந்தையின் திருப்பொருள்களை தனது ஊரின் சிற்றாலயத்தில் அடிக்கடி பார்த்து வந்ததால் பாத்ரே பியோ அவர்கள் இப்பெயரைத் தெரிவுசெய்தார் எனச் சொல்லப்படுகிறது.*

*இவர் 1910ஆம் ஆண்டில் அருட்பணியாளராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். உடல்நலக்குறைவு காரணமாக இவர் இல்லத்திலேயே தங்கியிருக்கவேண்டிய நிலை உருவானது.*

*1918ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி தன் கரங்கள் மற்றும் காலடியில் வலியை உணர்ந்த இவர் அவை கிறிஸ்துவின் காயங்கள் என அறிந்தார். இறுதியில் 1919ஆம் ஆண்டில் இவர் ஐந்து காய வரம் பெற்றிருந்தது எங்கும் பரவத்தொடங்கியது. இவர் வாழும்போதே புதுமைகளையும் ஆற்றியுள்ளார்.*

*1968ஆம் ஆண்டு செப்டம்பர் 23ஆம் திகதி அவர் இறைபதம் சேர்ந்தார்.*

*அருட்பணி பாத்ரே பியோவை 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் புனிதராக அறிவித்தார். புனித பாத்ரே பியோ இளம் பருவத்தினர், Pietrelcina கிராமம், பொதுமக்கள் பாதுகாப்புப்பணி தன்னார்வலர்களின் பாதுகாவலர் ஆவார்.*

மேரி தெரேசா...




## புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலய பொன்விழா திருப்பலி









*மட்டக்களப்பு புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தின் 50 ஆண்டு நிறைவு பொன்விழா திருப்பலியும் ஆலயத்தினை நிர்மாணித்துள்ள இயேசு சபை துறவி அருட்பணி எப். எக்ஸ் மேயர் அடிகளாரின் திருவுருவச் சிலை திறப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.*

*கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயம் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதிக்கு அருகில் சிறிய ஆலயமாக இருந்த காலத்தில திருவிழா காலங்களில் மக்களை உள்ளடக்க முடியாத நிலையில மிக சிறிய கட்டிடமாக இருந்தமையாலும் ஆலயம் குடா பகுதியில் காணப்பட்டமையாலும் மழைக் காலங்களில் மக்கள் வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியாதநிலை காணப்பட்டது.*

*அக்காலப் பகுதியில் புளியடிக்குடா பங்கை பொறுப்பேற்ற இயேசு சபை துறவி அருட்பணி எப். எக்ஸ் மேயர் அடிகளாரினால் இந்த ஆலயம் நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அந்த ஆலயம் ஆற்றுக்கு அருகில் இருந்தமையால் அதனை மீன் வடிவில் அமைக்க தீர்மானிக்கப் பட்டது.*

*அமெரிக்க படவரைஞர்களின் கலைநுட்பத்தில் இந்த ஆலயம் நிர்மாணிக்கப் பட்டுள்ளதுடன் குறித்த ஆலயத்தினை கட்டுவதற்கு காரணகர்த்தாவான அருட்பணி எப். எக்ஸ் மேயர் அடிகளாரை நினைவு கூறும் வகையில் அவரது திருவுருவச் சிலை புனித செபஸ்தியார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்வும் பொன்விழா விசேட கூட்டுத் திருப்பலியும் பங்குத்தந்தை அனிஸ்டன் மொறாயஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் இயேசு சபை துறவிகள், பங்குமக்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.*

**(படங்கள்.தகவல்; கல்லடி குறூப்நிருபர்)**

# "இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்"

## இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவிலிருந்து...



*நம் ஆண்டவராகிய இயேசு தமது மலைப்பொழிவில் "இரக்கமுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர் "என்று தெரிவிக்கின்றார்.*

*கடந்த ஞாயிறு திருவழிபாட்டு வாசகங்கள் நம்மை பிளவுகள் அல்லது இடைவெளிகளைத் தாண்டி துன்புறுவோரை நோக்கவும் அவர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்யவும் அழைப்பு விடுக்கின்றன.*

*ஒரு மனிதர் குடும்பத்தோடு உணவு விடுதிக்குச் சென்று உணவருந்த மேசையில் அமர்ந்தார். அவர் உள்ளே வரும் போதே அவ்வுணவு விடுதியின் வாசலில் பத்து வயது மதிக்கத் தக்க சிறுவனும் அவனுடைய தங்கையும் அமர்ந்திருந்ததைக் கண்டார்.*

*அச்சிறு குழந்தைகள் விடுதியின் கண்ணாடிக் கதவுகள் வழியே மற்றவர்கள் உண்பதைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தனர். அந்த உணவு விடுதிக்கு வந்து போகின்ற ஒருவர் கூட இதைக் கண்டுகொள்ளவில்லை. அதை கவனித்துக் கொண்டிருந்த அம்மனிதர் தன் குடும்பத்திற்காக வாங்கிய உணவோடு மேலும் இரண்டு பேருக்கு இரு வேளைக்கான உணவை வாங்கினார். அம்மனிதரின் குடும்ப உறுப்பினர்களுக்கு சற்று ஆச்சரியமாக இருந்தது. வாங்கிய உணவை எடுத்துச் சென்று வெளியிலே அமர்ந்திருந்த அந்த சிறார்களுக்குக் கொடுத்தார். உள்ளே வந்த அவர் ஆச்சரியத்தோடு தன்னை நோக்கிய குடும்ப உறுப்பினர்களிடம் இவ்வுணவு விடுதியின் கண்ணாடிக் கதவுகள் உதவி செய்ய எனக்கு தடையேதும் விதிக்கவில்லை எனக் கூறினார்.*

*பிளவுகளை அல்லது இடைவெளிகளைத் தாண்டி துன்புறுவோரை நோக்கவும் அவர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்யவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.*

*கடந்த ஞாயிறு நற்செய்தியில் செல்வந்தர் மற்றும் ஏழை லாசரைப் பற்றிய உவமையை நாம் வாசிக்கிறோம். அதில் செல்வந்தர் எந்தத் தவறும் செய்யவில்லை என்பது போலத் தோன்றும். அதாவது, அவர் ஏழை லாசரை கொடுமை செய்யவில்லை. வீட்டு வாயிலிலிருந்து விரட்டி அடிக்கவுமில்லை. அவரிடம் வேலை வாங்கவில்லை. ஆனால் அவர் செய்த மிகப்பெரிய தவறு அவருடைய அசட்டைத் தனம்.*

*தன் கண் முன்னே வேதனைப்படும் மனிதனை கண்டுகொள்ளாமல் இருந்த கல் நெஞ்சமே செல்வந்தர் செய்த பெரும் பாவம். தன் உணவரைக்கும் வாயிலுக்கும் இடையில் இருந்த இடைவெளியைக் கடக்க மனமில்லாமல் போனதால் விண்ணகத்திற்கும் பாதாளத்திற்கும் இடையே இருந்த இடைவெளியை செல்வந்தர் அதிகரித்துக் கொண்டார். நமக்கும் நம் கண்முன்னே துயரப்படுபவர்களுக்கும் இடையே பிளவுகள் அல்லது இடைவெளி அதிகரிக்க அதிகரிக்க நமக்கும் விண்ணகத்திற்கும் இடையே உள்ள இடைவெளி அதிகரித்துக் கொண்டேசெல்லும் என்பதை நாம் உணர வேண்டும்.*

*நம்மிடம் உதவும் அளவுக்கு ஒன்றும் இல்லை என்ற நிலையிலும் கூட நமது அன்பும் ஆறுதலும் ஒருவரைத் தூக்கிவிடும். மாறாக அசட்டைத்தனமுடையவர்களாய் உதவி செய்யத் தவறினால் செல்வந்தனுக்கு மறுக்கப்பட்டது போல நமக்கும் மண்ணக உதவியும் விண்ணக உதவியும் மறுக்கப்படும்.*

*இயேசு தமது மலைப்பொழிவிலே "இரக்கமுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர் "என்றுதெரிவிக்கின்றார். செல்வந்தரின் இரக்கமற்ற செயல் அவர் பெற இருந்த இரக்கத்தை நீக்கிவிட்டது. எனவே நாம் பிளவுகளைக் குறைத்துக்கொள்ள விழைவோம். இடைவெளிகளை அகற்றி துன்புறுவோரை நெருங்குவோம். விண்ணகம் நம்மை நெருங்கும். பிளவுகளைக் கடந்து பிறர் துன்பம் போக்கத் தயாராவோம்.*

அருட்பணி குழந்தை இயேசு பாபு...

# கிழக்கின் குரல்



# மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் பிரதேசமட்ட கண்காட்சியும் விற்பனையும்

(மட்டக்களப்பு விஷேட, மட்டக்களப்பு குறூப், கல்லடி குறூப் நிருபர்கள்)



உள்ளூர் உற்பத்தியாளர்களின் படைப்புக்களை சந்தைப்படுத்தி பொருளாதாரத்தினை மேம்படச் செய்யும் நோக்கில் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் நடாத்திய 'மட்டு முயற்சியான்மை' பிரதேச மட்ட கண்காட்சியும் விற்பனையும் நேற்று (26) மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு விற்பனைக் கண்காட்சி கூடத்தினைத் திறந்து வைத்தார்.

இதன்போது காட்சிப்படுத்தப்பட்டிருந்த உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்ட அரசாங்க அதிபர் இவர்களது முயற்சியை பாராட்டியதுடன், இவர்களுக்காக அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கக் கூடிய உதவிகளை பெற்றுக்கொடுக்குமாறு உரிய திணைக்களங்களின் அதிகாரிகளை பணித்திருந்தார்.

இக்காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை குறைக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, இக்கண்காட்சியில் கைத்தறி உற்பத்திகள், கைப்பணிப்பொருட்கள், விவசாய உற்பத்திகள், சேதனைப் பசளை உற்பத்திகள் மற்றும் உணவு உற்பத்திப் பொருட்கள் அடங்கலாக பெருமளவான உற்பத்திப் பொருட்களின் காட்சிக் கூடங்கள் நிறுவப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர்கள், கணக்காளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள், சுயதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராமிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் முயற்சியாளர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# புன்னக்குடா – தளவாய் சித்தி விநாயகர் ஆலய உற்சவம்



(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு புன்னக்குடா தளவாய் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் தீர்த்த உற்சவத்துடன் நிறைவுற்றது. கடந்த 19 ஆந் திகதியன்று சாந்தி கருமத்துடன் ஆரம்பமாகிய உற்சவம் சவுக்கடி இந்து சமுத்திர தீர்த்தத்துடன் நிறைவுற்றது.

உற்சவ தினங்களில் வசந்த மண்டப பூசையுடன் சுவாமி உள்வீதி உலா நடைபெற்றது. நந்திக்கொடியேற்றத்திருவிழா, குபேர லட்சுமி திருவிழா, வசந்த உற்சவத்திருவிழா, தீப லட்சுமி திருவிழா ஆகிய திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்வருட உற்சவத்தின் பால்குட பவனி நேற்று நடைபெற்றது.

# பொத்துவிலில் பழ வகைகளுக்கு இரசாயன கலவை பயன்பாடு

ஒலுவில் விசேட நிருபர்

## இரு வர்த்தகர்களுக்கு அபராதம்

பொத்துவில் பிரதேசத்தில் நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பழ வகைகளை விற்பனை செய்த 02 வர்த்தகர்களுக்கு நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் நுகர்வுக்குப் பொருத்தமில்லாத வாழைப்பழம் சாப்பிட்ட பலருக்கு வாந்தி , வயிற்றோட்டம் , வயிற்றுளைவு ஆகிய உபாதைகள் ஏற்பட்டதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பழங்களை விற்பனை செய்த கடைகள் கண்டுபிடிக்கப்பட்டதோடு பழக்கடைகளில் தவறான முறையில் காயை பழுக்க வைக்கும் திரவ எத்றல் இரசாயன பொருளும், அதனை தண்ணீருடன் கலந்து விசுறுகின்ற கருவியும் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இச் சுற்றி வளைப்பின் போது நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பழங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரிலும் அதனை முறையற்ற வகையில் பழுக்க வைப்பதற்கு பயன்படுத்திய இரசாயன பொருள் மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டு 03 வர்த்தகர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

இதையடுத்து பொத்துவில் நீதவான் நீதிமன்றினால் 02 வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஒரு வர்த்தகரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ம் திகதி மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாக திடீர் சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் உரிமையாளர்களுக்கெதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், வியாபார அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டு வர்த்தக நிலையங்கள் மூடப்படுமெனவும் சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்தார்.

# பிரதேச சபைக்குள் அன்புவழிபுரம் உள்வாங்கப்படுவதற்கு எதிர்ப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை அன்புவழிபுரம் வட்டாரத்தை நகர சபையிலிருந்து வெளியேற்றி பிரதேச சபைக்குள் உள்வாங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என திருகோணமலை சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகர சபை மாநகர சபையாக தரமுயர்த்தப்பட உள்ளது. அதற்கான நடவடிக்கையாக சனத்தொகை அதிக அளவில் இருக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

அதன் காரணமாக பிரதேச சபைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள சில கிராமங்களான சிங்ஹபுர, பாலையூற்று,மட்கோ, லிங்கநகர் போன்ற பகுதிகளை மாநகர சபைக்குள் உள்வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் திருகோணமலை நகர சபைக்குள் உள்வாங்கப்பட்டிருந்த இரட்டை அங்கத்தவர் வட்டாரத்தை கொண்டுள்ள அன்புவழிபுரம், திருகோணமலை நகர சபையிலிருந்து வெளியேற்றப்பட்டு பிரதேச சபைக்கு நகர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நடவடிக்கையினை அன்புவழிபுரம் சிவில் சமூகம் மற்றும் திருகோணமலை சமூக செயற்பாட்டாளர்கள் வன்மையாக எதிர்த்து வருகின்றனர்.

அதே நேரம் நகர சபைக்குள் இருக்கும் அபயபுர அவ்வாறே இருக்கின்றது, ஆனாலும் தமிழர்கள் அதிக அளவில் வாழும் அன்புவழிபுரம் வட்டாரம் மாத்திரம் ஏன் பிரதேச சபைக்குள் நகர்த்தப்படுகின்றது எனவும் பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இவ்வாறான செயற்பாடு தமிழ் பேசும் மக்களை இன்னும் துயரத்தில் ஆழ்த்துவதாக கருதுவதாகவும் சமூக சிந்தனையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே நகர சபைக்குள் இருக்கின்ற அன்புவழிபுரம் வட்டாரத்தை மாநகர சபைக்குள் உள்வாங்க வேண்டும் அல்லது நகர சபைக்குள் இருப்பதைப் போல அது இருக்க வேண்டும் எனவும் பிரதேச சபைக்குள் உள்வாங்க கூடாது எனவும் அன்புவழிபுரம் சிவில் சமூக அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

# திடீரென தீப்பற்றிய வாகனத்தால் பரபரப்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்



மட்டக்களப்பு நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேனொன்று திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மட்டக்களப்பு பிரதான வீதியில் மகாத்மா காந்தி பூங்காவிற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் திடீரென தீப்பற்றி எரிந்தது. ஸ்தலத்திற்கு உடனடியாக விரைந்த மட்டக்களப்பு மாநகர சபை தீயணைப்பு பிரிவினர் துரிதமாக செயற்பட்டு தீ பாரியளவில் பரவாமல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

# அவரி சஞ்சிகையின் 3வது இதழ் வெளியீடு

ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் ஏற்பாட்டினாலான அவரி சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளியீட்டு விழா இணைய தளத்தின் ஊடாக சூம் தொழில்நுட்பத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

பென் கிளப்பின் தலைவி சம்மாந்துறை மஷூறா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென் கிழக்கு பல்கழைலக்கழகத்தின் தமிழ்மொழித்துறைப் பேராசரியர் ரமீஸ் அப்துல்லாஹ் பிரதம அதிதியாகவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீபி இப்திகார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பேராசரியர் ரமீஸ் அப்துல்லாஹ் உரையாற்றுகையில், பெண்களின் இந்த ஒன்றுகூடல் காத்திரமானதமாக அமைந்திருந்தது. இந்நிகழ்வில் காத்திரமான ஆற்றல்களைக் கொண்ட பெண்களை இங்கு காண முடிந்தது. இந்த ஒன்றுகூடலின் ஊடாக எழுத்தாற்றல் மிக்கவர்களைவும் சந்திக்க முடிந்தது. இவ்வாறான ஏற்பாடுகள் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும். சர்வதேச மட்டத்திலும் இதன் பணிகள் வியாபிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் புர்கான் பீபி இப்திகார் குறிப்பிடுகையில், பெண்களுக்கான இவ்வாறான தனியொரு அமைப்பை தாம் இற்றை வரையும் அவதானிக்கவில்லை. என்றாலும் இது சிறப்பான அமைப்பாக விளங்குவதோடு சிறந்த ஆற்றல்மிக்கவர்களைக் கொண்டுள்ளதாகவும் தெரிகிறது. இவ்வாறான பணிகள் தொடர வாழ்த்துகிறேன் என்றார்.

இந்நிகழ்வில் பேஜஸ் அறிவு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் ஆய்வாளருமான சிராஜ் மசூர் சஞ்சிகை விமர்சனம் செய்ததோடு பென் கிளப்பின் உப தலைவர் என்.எம். ஆரிபா வரவேற்புரையையும் சஞ்சிகை ஆசிரியர் லைலா அக்ஷியா பதிலுரையையும் நிகழ்த்தினார். கிளப்பின் நிர்வாக உறுப்பினர்களான எம்.பி. பர்ஸானா நன்றியுரையையும் றிப்கா அன்ஸார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பையும் செய்தனர்.

காத்தான்குடியில்

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு பிற்போடப்பட்டது

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள உச்சநீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு காத்தான்குடியில் நடாத்தவிருந்த அமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள உச்சநீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு 26.09.2022 திங்கட்கிழமையன்று காத்தான்குடிக்கு வருகை தரவிருந்தது. எனினும் ஆணைக்குழுவின் காத்தான்குடி வருகை பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

'கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு, காத்தான்குடிக்கு வருகை தந்து பயங்கரவாதம் நிலவிய காலப்பகுதியில் இந்தப் பிரதேசத்திலிருந்து காணாமலாக்கப்பட்டு அல்லது கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் விவரங்களைச் பெறவிருந்தது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த ஆணைக்குழு காத்தான்குடிக்கு வருகை தந்து கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் விவரங்களையும் சாட்சியங்களைப் பதிவு செய்யவிருந்தது.

எனினும் இவர்களின் வருகையும் அமர்வும் பிற்போடப்பட்டுள்ளதாக காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

# காட்டு யானைகளால் பயிர்ச்செய்கை நாசம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை ஹிறா நகர் மீள்குடியேற்றக் கிராமத்தில் காட்டு யானைகளால் வீட்டுப் பயிர்ச்செய்கை அழிக்கப்படுவது அதிகரித்து வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். நள்ளிரவு வேளைகளில் கிராமத்துக்குள் புகும் யானைகள் வீட்டுத் தோட்டத்திலுள்ள தென்னை, மா, பலா, வாழை மற்றும் வீட்டுத்தோட்ட பயிர்களை துவம்சம் செய்து வீட்டு சுற்றுப்புறச் சுழலிலுள்ள பயன்தரும் மரங்கள் பயிர்கள் என்பவற்றையும் சேதப்படுத்திசெல்கின்றன. பாலமுனை ஹிறா நகருக்கு அண்மையில் காணப்படும் மலைப் பிரதேச காட்டுப்பகுதி மற்றும் ஒலுவில் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் போன்ற இடங்களுக்கு நாளாந்தம் உணவு உண்ணுவதற்காக வரும் காட்டு யானைகளே இவ்வாறு மக்கள் குடியிருப்பு பிரதேசங்களுக்குள் இரவு நேரங்களில் புகுந்து தொல்லைப்படுத்தி வருகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டு யானைகளின் தொல்லையில் இருந்து பொது மக்களின் உயிர் உடமைகள் மற்றும் வீட்டுத் தோட்ட வாழ்வாதார பயிர்கள் என்பவற்றை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

# ஆற்றுமணல் ஏற்றிவந்த லொரிக்கு அபராதம்

பாலமுனை தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்று மண் ஏற்றி வந்த டிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் 15,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்று மண் ஏற்றி வந்த வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார், டிப்பர் வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கள் கிழமை(26) ஆஜர்படுத்திய போது மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தில்

# அ'பற்று பிரதேச சபை முன்னின்று செயற்படும்

## தவிசாளர் றாசீக் தெரிவிப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உணவு உற்பத்தி, உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேச சபையும் இணைந்து ஒவ்வொரு வட்டாரத்திலும் பயிற்செய்கையினை மேற்கொள்ளுவதுடன் பயிற்செய்கையாளர்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களையும் இச்சபை வழங்கும் என அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாசீக் தெரிவித்தார்.

தேசிய மர நடுகை வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச சபையினால் அரசாங்கத்தின் செயற்திட்டத்திற்கு அமைவாகவும் PT01 வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக சபையின் முற்றத்தில் தவிசாளரினால் வீட்டு பயிற்செய்கை வெள்ளிக்கிழமை (23) ஆரம்பித்து வைக்கப்பட்டது.நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

திருக்கோவில் பிரதேசத்தில்

# வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு பயிர்விதைகள் வழங்கி வைப்பு

திருக்கோவில் தினகரன் நிருபர்

உணவுப் பாதுகாப்பை பேணுவதற்காக போசாக்குடனான உணவுத் தேவையை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் நோக்குடன் திருக்கோவில் பிரதேசத்தில் மரக்கறிப் பயிர்கள் மற்றும் நாற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டப் பயனாளிகளை ஊக்கப்படுத்தும் நோக்குடன் லண்டன் றே ஓவ் ஹோப் நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் அம்பாரை மாவட்ட நாமே நமக்கு எனும் அமைப்பின் ஊடாக கிராமங்கள் தோரும் இவ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மரக்கறிப் பயிர்விதைகள் மற்றும் நாற்றுக்கள் என்பன திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக வழங்கப்பட்டுள்ளதுடன் திருக்கோவில் பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்ட வருகின்றன.

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் பெறுகைக்கான அறிவித்தல் 2022.09.24ஆம் திகதி சனியன்று மற்றும் 2022.09.27ஆம் திகதி செவ்வாய்க் கிழமையன்று (Daily News) டெயிலிநியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்

Rectification & Reinstatement of Electric Fence at pharmaceutical zone (phase I) Arabokka
Contract No. BOI/TS/pharma-Ham/2022/01

மேற்படி பெறுகைக்கான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் 2022.09.24ஆம் சனிக்கிழமை மற்றும் 2022.09.27ஆம் செவ்வாய்க்கிழமைகளின் Daily News பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர்**
**இலங்கை முதலீட்டுச் சபை**

## விசேட அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

நுகேகொட, கங்கொடவில, பார்க் வீதி, இல.31ஐச் சேர்ந்த, கமாச்சி விதானகே மஹிந்த பெரேரா (தே.அ.அ.இல 432770710V இன் உரிமையாளர்) ஆகிய என்னால் பன்னிப்பிட்டிய, மஹல்வராவ வீதி, இல.72/5 A ஐச் சேர்ந்த சஜீவ ரஞ்சன் பொல்வத்தவுக்கு வழங்கப்பட்ட, கொழும்பு மாவட்ட பகிரங்க நொத்தாரிசு லலனி ஹெட்டிகேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.03.19ம் திகதியிடப்பட்ட விசேட அற்றோணி தத்துவ இல.4140ஐ 2022 செப்டெம்பர் 16ம் திகதி முதல் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது என்சார்பாக இதன் பிறகு சொல்லப்பட்ட சஜீவ ரஞ்சன் பொல்வத்தவினால் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

**கமாச்சி விதானகே மஹிந்த பெரேரா**

### இலங்கை புகையிரத சேவை

## கேள்வி அறிவித்தல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருள் களஞ்சியம், ஓய்வுஅறை, வாகன நிறுத்துமிடம், விளம்பர பிரசாரம் போன்ற விடயங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**❖ கொழும்பு பொருள் களஞ்சிய கட்டிடத்தொகுதியின் பொருள் களஞ்சியம்**

கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ள கொழும்பு பொருள் களஞ்சிய கட்டிடத்தொகுதியில் பொருள் களஞ்சிய பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக இரண்டு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படும்

(கேள்வி விண்ணப்பங்களை 2022.10.20ம் திகதி பி.ப.2.00 வரை பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2022.10.21 பி.ப.2.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். 2022.10.21ம் திகதி பி.ப.2.00 இற்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

**❖ ஓய்வு அறை**

புகையிரத திணைக்களத்திற்கு பண்டாரவளை பஸ் நிறுத்துமிட கட்டிடத்தின் முதலாம் மாடி மண்டபம் மற்றும் இரண்டாம் மாடி ஓய்வு அறைகள் 04 ஐ ஐந்து வருட காலத்திற்கு வர்த்தக நடவடிக்கைக்காக குத்தகைக்கு வழங்கப்படும்.

(கேள்வி விண்ணப்பங்கள் 2022.10.17ம் திகதி பி.ப.2.00 வரை பெற்றுக்கொள்ள கூடியதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022.10.18 பி.ப.2.00 இற்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2022.10.18 பி.ப.2.00 இற்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

| தொடர் இல | வாகன நிறுத்துமிடம் | அளவு (பேர்ச்) |
|---|---|---|
| 01 | நாத்தாண்டிய | 14.05 |
| 02 | எல்ல | 19.4 |
| 03 | கெப்டன் பூங்கா கோவில் வீதி | 14 |
| 04 | ராகம | 15.97 |
| 05 | டி.பி.ஜாயா மாவத்தை | 102.45 |
| 06 | ஹிக்கடுவ | 20.42 |
| 07 | அம்பலங்கொட | 8.33 |
| 08 | வேயங்கொட | 28.57 |

| தொடர் இல | வாகன நிறுத்துமிடம் | அளவு (பேர்ச்) |
|---|---|---|
| 09 | மருதானை புகையிரத நிலையம் முன்னால் | ரூட் 1 பேர்ச் 0.40 |
| 10 | பெஸ்டியன் மாவத்த | ரூட் 1 பே-ர்ச் 5.95 |
| 11 | மாத்தறை | 23.09 |
| 12 | தெற்கு பயாகல | 16 |
| 13 | வாத்துவ | 23.50 |
| 14 | மட்டக்களப்பு | 10.50 |
| 15 | புளுகஹகொட | 150 ச.அடி |
| 16 | முத்தெட்டுகல | 11,000 ச.அடி |

(கேள்வி விண்ணப்பங்கள் 2022.10.18 பி.ப.2.00 வரை பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022.10.19 பி.ப.2.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் . 2022.10.19 பி.ப.2.00 இற்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும்)

**❖ விளம்பர பிரசாரம்**

புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான கீழேயுள்ள புகையிரத பாதுகாக்கப்பட்ட பிரதேசம் மற்றும் விளம்பர பிரசாரத்திற்காக இரண்டு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படும்.

| இலக்கம் | பாதுகாக்கப்பட்ட பிரதேசம் / வளாகம் | அறிவித்தல் பலகை அளவு/சதுர அடி | அறிவித்தல் பலகை எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கட்டுநாயக்க விமானநிலைய உள்நுழைவு பாதையின் இருபுறம் | 40X10 | 10 |
| 02 | கொழும்பு கோட்டை லோட்டஸ் வீதி சந்தி | 30X15<br>20X10 | 01<br>01 |
| 03 | தெமட்டகொட மவுன்ட்மேரி விளையாட்டரங்கு வளாகம் | 30X20 | 02 |
| 04 | தெமட்டகொட மவுன்ட்மேரி விளையாட்டரங்கு வளாகம் | 2842 | |
| 05 | கண்டி கெட்டம்பே புகையிரத குறுக்கு வீதியின் அருகில் | 30X20 | 01 |
| 06 | பண்டாரவளை, எல்லதொட்ட பாதுகாக்கப்பட்ட பிரதேசம் (159 மைல் 73 சங்கிலி) | 30X20 | 02 |
| 07 | மருதானை புகையிரத நிலைய வளாகம் | 20X10 | 01 |
| 08 | ஜாஎல புகையிரத நிலைய வளாகம் முன்னால் | 15X7 | 01 |

(கேள்வி விண்ணப்பங்களை 2022.10.19 பி.ப.2.00 வரை பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2022.10.20 பி.ப.2.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். 2022.10.20 பி.ப.2.00 இற்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

**❖ கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்**

மேற்படி பொருள் களஞ்சியம், ஓய்வு அறை, வாகன நிறுத்துமிடம் மற்றும் விளம்பர பிரசாரத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தினம் வரை கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் அதற்காக மீளளிக்கப்படாத ரூ.2,500/- தொகையை திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும். கேள்வி விண்ணப்பங்களை வார நாட்களில் 09.00 - 15.00 மணி வரை குறித்த புகையிரத நிலையத்திலிருந்து அல்லது புகையிரத நிலைய வர்த்தக மற்றும் விற்பனைப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். ஒருவர் பொருட்களஞ்சியம், ஓய்வு அறை வாகன தரிப்பிடம் மற்றும் பல விளம்பரங்களுக்காக விண்ணப்பிப்பதாயின், அதற்காக வேறுவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் கேள்வி விண்ணப்பத்தில் அட்டவணை 01இல் குறிப்பிடப்படும் சகல உருப்படிகளுக்கும் வேறுவேறாக கருதி கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறியையும் செலுத்துதல் வேண்டும்.

**❖ கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

ஒவ்வொரு பொருட்களஞ்சியம், ஓய்வுஅறை, வாகன நிறுத்துமிடம் மற்றும் விளம்பர பிரசாரம் சார்பாக பெற்றுக்கொள்ளும் விண்ணப்பங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிடல் வேண்டும். அவ் உறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் பொருட்களஞ்சியம், ஓய்வுஅறை, வாகன நிறுத்துமிடம் மற்றும் விளம்பர பிரசார வளாகத்தின் பெயரை குறிப்பிட்டு குறித்த கேள்வி திறக்கப்படும் தினத்திற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, வர்த்தக மற்றும் விற்பனை அலுவலகம், புகையிரத நிலையம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது புகையிரத நிலைய பிரதி அதிகாரி வர்த்தக மற்றும் விற்பனை உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். அந்நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமான மற்றும் தொலையும் விண்ணப்பங்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**❖ கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்**

மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பொருட்களஞ்சியம், ஓய்வறை, வாகன நிறத்துமிடம் மற்றும் விளம்பர பிரசார உருப்படிகளில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் மற்றும் நேரங்களில் வர்த்தக மற்றும் விற்பனை அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க வாய்ப்பளிக்கப்படும்.

கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு முன் மேற்படி சகல பொருட்களஞ்சியங்கள், ஓய்வு அறைகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் விளம்பர பிரசார வளாகங்களை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு வாய்ப்பளிக்கப்படுவதுடன் அதற்காக குறித்த புகையிரத நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் அல்லது புகையிரத தலைமையக வர்த்தக மற்றும் விற்பனை அலுவலகத்தின் மூலம் அனுமதிபெறல் வேண்டும். திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும். கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்கள் தேவையெனில் குறித்த புகையிரத நிலையத்திலிருந்து அல்லது தொலைபேசி இல : 011-2421281 - (நீடிப்பு இல : 8235) பெக்ஸ் : 0112431909 ஈமெயில் : marketing.slr@hotmail.com ஊடாக இலங்கை புகையிரத வர்த்தக மற்றும் விற்பனை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**வர்த்தக மற்றும் விற்பனை அலுவலகம்,**
**புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்த,**
**கொழும்பு - 10**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## திசு வளர்ப்பு ஆய்வுகூடத்திலுள்ள உத்தேச அறை பகுதிபிரிப்பு வேலைகள்

## கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம்

01. பெசேவ நீங்கலாக 7.6 மில்லியன் ரூபா கிரயமாக (வெட் வரியின்றி) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஹம்பாந்தோட்டை, வெலிகெட்ட புதிய நகரம், கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம், ''திசு வளர்ப்பு ஆய்வுகூடத்திலுள்ள உத்தேச அறை பகுதிபிரிப்பு'' எனும் வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

    இந்த வேலையின் அமைவிடம் ஹம்பாந்தோட்டை, வெலிகெட்ட புதிய நகரம், கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவன வளவில் உள்ளன. ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் ''திசு வளர்ப்பு ஆய்வுகூடத்திலுள்ள உத்தேச அறை பகுதிபிரிப்பு'' ஆகும்.

    இந்த ஒப்பந்தத்தின் நிர்மாணக் காலம் ஒப்பந்தம் கையளிக்கப்படும் நாள் முதல் 60 நாட்களாகும்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
    - அ. ஒப்பந்தக்காரர் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் (CIDA) கட்டிட நிர்மாணத் துறையில் C-7 அல்லது C-6 தரத்திற்கான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - ஆ. NCT அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் கட்டிட நிர்மாணத் துறையில் 1 வருட அனுபவத்துடனான தொழில்நுட்ப அதிகாரியொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை விலைமனுக்கோரல் ஆவணங்களை ஹம்பாந்தோட்டை, வெலிகெட்ட புதிய நகரம், கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. 2022 செப்டெம்பர் 27ஆம் திகதியிலிருந்து 2022 ஒக்டோபர் 17ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000.00 ரூபாவைச் செலுத்தியும் மற்றும் ஹம்பாந்தோட்டை, வெலிகெட்ட புதிய நகரம், கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும்.
06. விலைமனுக்களை 2022 ஒக்டோபர் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவாளர், கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம், வெலிகெட்ட புதிய நகரம், ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது பதிவாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் அதன்பின் உடன் திறக்கப்படும்.
07. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 77 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2023 ஜனவரி 02ஆம் திகதி வரை)
08. சகல விலைமனுக்களுடனும் எழுபத்தாறாயிரம் ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 105 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2023 ஜனவரி 30ஆம் திகதி வரை).

விலைக்கோரல் பிணை முறியானது ஹம்பாந்தோட்டை, வெலிகெட்ட புதிய நகரம், கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனத்தின் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம்,**
**வெலிகெட்ட புதிய நகரம்,**
**ஹம்பாந்தோட்டை.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ SWM/40/ 2022 | கொழும்பு மாநகர சபையின் 05ஆம் மாநகர வட்டாரத்திற்கு திண்மக் கழிவு முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் | 12,000.00 + வெட் | 4,600,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | தேவையான தகுதி, நிரூபிக்கப்பட்ட அனுபவம், திறன் மற்றும் இந்த வகையான சேவைகளை வழங்குவதற்கான திறன் ஆகியவற்றைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (திண்மக் கழிவு முகாமைத்துவம்) தொலைபேசி: 0777314323 வட்டாரப் பணிப்பாளர் D2 (திண்மக் கழிவு முகாமைத்துவம்) தொலைபேசி: 0771093129 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   - அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   - ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
     - ➢ வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
     - ➢ வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2022-10-17ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022-10-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 220 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.05.25ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.04.25ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-10-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022-10-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

எ. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-10-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நகர மண்டப வளவு, TDRS கூட்ட அறையில் இடம்பெறும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

## 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

(அரச உரிமையாக்கப்பட்ட தொழில் முயற்சி)

1. 2023ஆம் வருடத்தில் கீழே பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் உடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் அடங்கலாக புகழ்வாய்ந்த வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அமைப்புக்களிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் இன் தலைவரினால் விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
2. 2022.10.03ஆம் திகதியிலிருந்து 2022.11.24ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத பதிவு செய்தல் கட்டணமாக கீழே ஒவ்வொரு வழங்கல்/ சேவைக்கும் எதிராக குறிப்பிட்டுள்ள தொகையை செலுத்திய பின்னர், கொழும்பு-03, காலி வீதி, 345 5/1ஆம் இலக்கத்தின் 5ஆம் மாடியிலுள்ள மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய விதிக்கப்பட்ட படிவத்திலேயே பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அனைத்து பணக்கொடுப்பனவுகளும் ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். காசுக்கட்டளைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கம்பனி தலைப்புக் கடிதத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பக் கடிதங்களின்றி வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களுக்கான பதிவு செய்தல் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

| A - மூலப்பொருட்கள் | | |
|---|---|---|
| 01. | வெள்ளைச் சீனி | 20,000.00 |
| 02. | திரவ குளுக்கோஸ் சிரப் | 10,000.00 |
| 03. | கொக்கோ பவுடர் | 10,000.00 |
| 04. | மேசை உப்பு/ Micro fine salt | 3,000.00 |
| 05. | நிறமூட்டிகள் (அனைத்து உணவு தரங்களுக்கானது) | 5,000.00 |
| 06. | ரெனட் பவுடர் | 5,000.00 |
| 07. | பெரபின் மெழுகு | 2,000.00 |
| 08. | இஞ்சி பழுதுபடாமல் பாதுகாப்பது | 1,000.00 |
| 09. | நிலைப்படுத்தி (Stabiliser) | 5,000.00 |
| 10. | உலர்ந்த திராட்சை | 3,000.00 |
| 11. | உலர்ந்த கஜு விதைகள்/ துண்டுகள் | 3,000.00 |
| 12. | ஐஸ் கூம்புகள் | 1,000.00 |
| 13. | பூசணிக்காய் பழுதுபடாமல் பாதுகாப்பது | 2,000.00 |
| 14. | Tooty Fruity | 1,000.00 |
| 15. | ஜேலட்டின் | 10,000.00 |
| 16. | விட்டமின் ஏ மற்றும் டி | 5,000.00 |
| 17. | யோகட் கல்ச்சர் | 12,000.00 |
| 18. | லக்டோஸ் | 5,000.00 |
| 19. | பொட்டாசியம் சொபேட் | 1,000.00 |
| 20. | இயற்கையான நிற மூட்டிகள் (ஐஸ்கிறீம்/ UHT பால் உற்பத்தி) | 1,000.00 |

| B – பொதியிடல் பொருட்கள் | | |
|---|---|---|
| 21. | ஐஸ்கிரீமிற்கான பொலிபிரோலீன் கொள்கலன்கள் (1 L/2l/4L) | 10,000.00 |
| 22. | Polypropylene containers (Thermo forming) for ice cream/curd (500ml/1l) | 10,000.00 |
| 23. | H.I.P.S cups for Yoghurt & Ice –cream (80ml) | 10,000.00 |
| 24. | HDPE Cans for condensed milk & Ghee (4l) | 10,000.00 |
| 25. | Aluminium foil for yoghurt cups | 10,000.00 |
| 26. | Triple laminated & metalized polyester foil for milk powder | 10,000.00 |
| 27. | Co-extruded polyethylene film (3 layer) for liquid milk | 10,000.00 |
| 28. | பொலித்தீன் பைகள் மற்றும் கடைப் பொருட்களுக்கான பைகள் (LDPE) | 5,000.00 |
| 29. | பாற்கட்டிக்கான வளி நீக்கப்பட்ட பைகள் (50கி-100கி-200கி-1) கி.கி. | 5,000.00 |
| 30. | நெய்யப்பட்ட பொலிபிரோபிலீன் பைகள் | 5,000.00 |
| 31. | 3 ply paper bags (25 kgs) | 5,000.00 |
| 32. | பால் பவுடர் மற்றும் பாற்கட்டிற்கான அச்சடிக்கப்பட்ட காட்டுன் பெட்டிகள் | 10,000.00 |
| 33. | அட்டை பெட்டிகள் | 10,000.00 |
| 34. | பிளாஸ்டிக் கொள்கலன்கள் மற்றும் கண்ணாடி போத்தல்களுக்கான அச்சடிக்கப்பட்ட லேபல்கள்-ஸ்டிக்கர்கள் | 10,000.00 |
| 35. | பெட்டி பொதியிடல் தட்டங்கள் | 10,000.00 |
| 36. | Printed OPP Tapes | 5,000.00 |
| 37. | Printed Crown corks | 5,000.00 |
| 38. | கட்டிப்பாலுக்கான தகர கொள்கலன்கள் | 5,000.00 |
| 39. | சுருக்கப்பட்ட பொதி சுற்றும் பொருட்கள் | 5,000.00 |
| 40. | தொற்று நீக்கப்பட்ட பால், நெய் மற்றும் பாற்கட்டிக்கான கண்ணாடி போத்தல்கள் | 5,000.00 |
| 41. | Plastic Crates & pallets | 10,000.00 |
| 42. | உறிஞ்சும் குழாய்கள் | 3,000.00 |
| 43. | நைலோன் டுவைன் நூல் | 2,000.00 |
| 44. | Hot Melt Gum (Glue) | 2,000.00 |

| C – ஆய்வுகூட அம்சங்கள் | | |
|---|---|---|
| 45. | விஞ்ஞான ரீதியிலான மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் | 5,000.00 |
| 46. | ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்கள் | 5,000.00 |
| 47. | பால் மற்றும் பால் உற்பத்திகளுக்கான பகுப்பாய்விற்கான இரசாயனங்கள் (Sulphuric, Amyl, HCl, etc.) | 5,000.00 |
| 48. | கைத்தொழில் இரசாயனங்கள் (Nitric Acid, $H_2O$, Aluminium sulphate, etc., | 5,000.00 |
| 49. | கிருமிநாசினி இரசாயனங்கள், கைகளை தூய்மையாக்கும் இரசாயனங்கள், போன்றன | 5,000.00 |
| 50. | சலவைப் பொருட்கள் - பொதுவான நோக்கத்திற்கானது – சவர்க்காரம், விம் போன்றன | 5,000.00 |
| 51. | கொதிகலன் நீர் சுத்திகரிப்பு இரசாயனங்கள் | 1,000.00 |
| 52. | Micro Biology Media | 1,000.00 |
| 53. | Surgical Gloves/Disposable Gloves/Disposable Masks/Disposable caps/ Reusable Masks | 1,000.00 |

| D – சீருடைகள்/ சப்பாத்துக்கள் | | |
|---|---|---|
| 54. | சப்பாத்துக்கள் | 1,000.00 |
| 55. | பாதுகாப்பு சப்பாத்துக்கள் (Safety Shoes) | 1,000.00 |
| 56. | கம்பூட்ஸ் | 1,000.00 |
| 57. | சீருடை பொருட்களை வழங்கல் | 1,000.00 |
| 58. | Supply of T-Shirts and Bottoms | 2,000.00 |

| E – அச்சடித்தல் - காகிதாதி அச்சடித்தல் - அலுவலக சாதனங்கள் | | |
|---|---|---|
| 59. | அனைத்து காதிதாதி (பேனாக்கள், சிஆர் புத்தகங்கள், ஏ4) போன்றன | 5,000.00 |
| 60. | கணனி தாள்கள் (வெற்றுத் தாள்கள், அச்சடிக்கப்பட்ட கணனி படிவங்கள் போன்றன) | 5,000.00 |
| 61. | அனைத்து வகையான புத்தகங்கள்-பதிவேடுகளை அச்சடித்தல் | 5,000.00 |
| 62. | அலுவலக சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 5,000.00 |
| 63. | கணனிகள், துணையுறுப்புக்கள் மற்றும் உள்ளடங்கலான பொருட்கள் | 5,000.00 |

| F – வாகன உதிரிப்பாகங்கள் | | |
|---|---|---|
| 64. | மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புக்கள் | 1,000.00 |
| 65. | ரயர்கள் மற்றும் ரியுப்புக்கள் | 1,000.00 |
| 66. | Upholstery work of vehicles (Cab covers, Vehicle seat covers canopies) | 1,000.00 |

| G – பொறியியல் அம்சங்கள் | | |
|---|---|---|
| 67. | குளிர்சாதனப் பெட்டிகள், போத்தல் குளிரூட்டிகள் மற்றும் உறையவைப்பான்கள் | 5,000.00 |
| 68. | வளிச்சீராக்கல் இயந்திரங்கள் | 5,000.00 |
| 69. | பாற்பண்ணை இயந்திராதிகள் உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் | 5,000.00 |
| 70. | Pneumatic Spares for Machinery | 5,000.00 |
| 71. | Spare parts for steam boiler/boiler pumps/steam valves etc. | 1,000.00 |
| 72. | Spare parts for cold rooms-Ref. compressor condensing units, other refrigerator spares | 1,000.00 |
| 73. | Spare parts for Refrigerators/Bottle Coolers/Deep Freezer & Air Conditioner | 5,000.00 |
| 74. | Industrial /Ref. Gases | 5,000.00 |
| 75. | Heating Elements, Sensors and other related items for Heaters | 1,000.00 |
| 76. | மின்னியல் அம்சங்கள், சாதனங்கள், இணைப்புக்கள் மற்றும் அனைத்து வகையான வயர்கள் | 3,000.00 |
| 77. | ஹாட்வெயார் அம்சங்கள் | 5,000.00 |
| 78. | Bearings | 5,000.00 |
| 79. | Rubber rings, Packing, Gasket and similar rubber-based parts | 5,000.00 |
| 80. | Chains, V-belts and Power Transmission belts | 1,000.00 |
| 81. | Castor wheels, Hand Trolleys and Carts | 1,000.00 |
| 82. | நிலுவை உபகரணங்கள் (Weighing Scales) | 2,000.00 |
| 83. | Workshop Tools | 1,000.00 |

| H – பிற அம்சங்கள் | | |
|---|---|---|
| 84. | Sealing wire and Lead Seals | 1,000.00 |
| 85. | Veterinary drugs | 5,000.00 |
| 86. | தளபாடம் | 1,000.00 |
| 87. | தேயிலை | 1,000.00 |
| 88. | தும்பு உற்பத்திகள் மற்றும் பொருட்கள் | 1,000.00 |
| 89. | துடைக்கும் கடதாசி (Paper Serviettes) | 2,000.00 |

| I - சேவைகள்: | | |
|---|---|---|
| 90. | சிவில் நிர்மாண வேலை, கட்டிட பராமரிப்பு | 2,000.00 |
| 91. | பெயர் பலகைகள், அடையாள பலகைகளை அச்சிடல் மற்றும் இணைத்தல் | 5,000.00 |
| 92. | துருப்பிடிக்காத உருக்கு உபகரணங்களை இணைத்தல் (S/S Plungers) , sampling dippers and other items | 1,000.00 |
| 93. | Fabrication & repairing works for cold rooms and others | 1,000.00 |
| 94. | துறைமுகத்திலிருந்து பண்டங்களை அகற்றல் | 1,000.00 |

| J - விலங்குணவு மூலப்பொருட்கள் (பொல்காவல தொழிற்சாலை) | | |
|---|---|---|
| 95. | தேங்காய் புண்ணாக்கு | 2,000.00 |
| 96. | அரிசித் தவிடு | 2,000.00 |
| 97. | சோள உணவு | 2,000.00 |
| 98. | பருப்பு கோதுகள் | 2,000.00 |
| 99. | கோதுமைத் தவிடு | 2,000.00 |
| 100. | DI - கல்சியம் பொஸ்பேற் | 2,000.00 |

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:.**

01. சிவில் பொறியியல் நிர்மாண வேலைக்காக தம்மை பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்துடன் தம்மை 2022/2023 ஆம் வருடங்களுக்காக பதிவு செய்த அங்கத்தினர்களாக இருத்தல் வேண்டும். (CIDA உடன் பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
02. கம்பனியினால் தற்போது பேணப்படும் 2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களின் பட்டியலானது 2022 டிசம்பர் 31ஆம் திகதியிலிருந்து செயல்வலுவற்றதாகிவிடும்.
03. பதிவு பெற்ற வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வேலை/ வழங்கல்கள்/ சேவைகளுக்கான விலைமனுக்கோரல்கள் தேவையேற்படும் போது கோரப்படும் என்பதுடன் தேவைப்படும்போது போட்டிரீதியிலான முன்வைப்புக்கள்/ விலைமனுக்களை பிற வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் கோருவதற்கான உரிமையை நாம் கொண்டுள்ளோம்.
04. கேள்விச் சபையானது அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலிப்பதுடன் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும். தேவைப்படுத்தல்களை வெற்றிகரமாக நிறைவு செய்யாத/ பூர்த்தி செய்யாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
05. தேவைப்படும்போது விலைமனுக்கோரலை சமர்ப்பிக்காத அல்லது குறிப்பிட்ட காலத்தில் கட்டளையொன்றை நிறைவேற்ற தவறும் அல்லது தேவைப்படும் போது மாதிரிக்கமைவாக பதிவு பெற்ற வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் சமர்ப்பிக்கத் தவறும் வழங்குநர்களின் பெயரை நீக்குவதற்கான உரிமையை நாம் கொண்டுள்ளோம்.
06. ஒரு வழங்கல் அல்லது சேவைக்கு மேற்பட்டவைகளுக்கு தம்மை பதிவு செய்ய விரும்புபவர்கள் ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனியான விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள கூட்டில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.
07. விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல் அல்லது ஆவணங்கள் பொய்யானது என கண்டுபிடிக்கப்பட்டால், பதிவு செய்தல் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும். மேலும், செலுத்தப்பட்ட பணக்கொடுப்பனவுகள் எந்த சூழ்நிலையிலும் திருப்பி செலுத்தப்பட மாட்டாது என்பதை தயவு செய்து கவனிக்கவும்.
08. வியாபார பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளவற்றிற்கு மாத்திரமே வழங்குநர்கள் பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான அம்சங்களுக்கு பதிவு செய்யப்படுவார்கள்.
09. உற்பத்தியாளர் அல்லாத அனைத்து வழங்குநர்களும் நடைமுறை வருடத்திற்கு உங்கள் கம்பனியானது அதிகாரம் வழங்கப்பட்ட விற்பனையாளர் அல்லது விநியோகஸ்தர் என உற்பத்தியாளரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உள்ளூர் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட எழுத்து மூலமான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2022-11-24ஆம் திகதிக்கு பிந்தாமல் பதிவுத் தபாலில் ''கொள்வனவு முகாமையாளர், மில்கோ (பிறைவட்) லிமிட்டெட், 5ஆம் மாடி, இல. 345/ 5/1, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரையும் நேரடியாகவும் ஒப்படைக்கப்படலாம்.
11. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பெசேவ பதிவு செய்தல் சான்றிதழ் அல்லது பெசேவ விலக்களிப்பு சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.
12. வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோர் ஆகக் குறைந்தது 30-60 நாட்கள் காலப்பகுதிக்கான கடன் வசதிகளை முன்வைக்குமாறும் நாராஹேன்பிட்டவிலுள்ள மில்கோ களஞ்சியசாலைக்கு இலவசமாக ஒப்படைக்குமாறும் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.
13. விண்ணப்பங்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Registration of Suppliers/ Contractors – 2023" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
14. விண்ணப்பங்களை நுட்பமாக பரீட்சித்த பின்னரே பதிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.
15. பதிவு செய்தல் முடிவுற்ற பின்னர் பதிவு செய்யப்பட்ட வகுதிகளுக்கான மாற்றங்கள் எந்த சூழ்நிலையிலும் மேற்கொள்ளப்பட இயலாது என்பதையும் வகுதிகளின் மாற்றீடுகளுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் தயவு செய்து கவனிக்கவும்.
16. பண்டங்களின் வழங்கல் தொடர்பாக தேவைப்படின் மேலதிக நிபந்தனைகளையும் அமுல் நடாத்துவதற்கான உரிமையை மில்கோ கொண்டுள்ளது.
17. இந்த பதிவு செய்தலில் மில்கோ ஊழியர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் பதிவு செய்ய இயலாது.
18. **பதிவு செய்ய விரும்பும் அனைத்து வழங்குநர்களும் பதிவு செய்யும் படிவத்தை பெறுவதற்காக வகுதி-அம்சத்திற்கெதிராக குறிப்பிட்டுள்ள மிகச்சரியான தொகையை ரொக்கப் பணத்தில் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். வங்கி விபரங்கள் பின்வருமாறு: (ரொக்கப் பணம் எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) வைப்பு பத்திரத்தில் வாடிக்கையாளரின் பெயரை தவறாது குறிப்பிடவும்.**
    **கணக்கு வைத்திருப்பவரின் பெயர்:** MILCO (PVT) LTD
    **வங்கி மற்றும் கிளை** **மக்கள் வங்கி, கூட்டுரு வங்கித்துறை பிரிவு**
    **கணக்கிலக்கம்** **004100180210331**
19. வழங்குநர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அலுவலகத்திற்கு சமுகமளிக்கும் வேளையில் கொவிட்-19 இற்கு பிரயோகிக்கப்படுத்தப்படும் நியமமாக்கப்பட்ட சுகாதார முன்னெச்சரிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
20. 011-4500530-531/532/533/534 ஆகிய தொலைபேசி எண்களினூடாக எவ்வகையான விபரங்களையும் கொள்வனவிற்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்,**
**5ஆம் மாடி (கொள்வனவுப் பிரிவு),**
**இல.: 345, 5/1, காலி வீதி, கொழும்பு-03.**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

# கமத்தொழில் அமைச்சு

## விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம்
## திட்டப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு

சர்வதேச அபிவிருத்தி நிதியுதவியுடன் விவசாய அமைச்சு உலக வங்கியின் ஏஜென்சி (IDA) விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்துகிறது. சிறு விவசாயிகளுக்கு உற்பத்தி செய்ய ஆதரவளிக்கும் கூட்டு உத்திக்கு (CPS) இணங்க, போட்டி மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்கள், சந்தை தேவைகளை பூர்த்தி செய்யும் திறனை மேம்படுத்துகின்றன மற்றும் அதிகரித்த வணிகமயமாக்கலை நோக்கி நகரும் திட்டத்திற்கான மீதமுள்ள காலம், செயல்படுத்தும் காலம் சுமார் 1 வருடம் மற்றும் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 90.23 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (உலக வங்கி கடன் 64.23 அமெரிக்க டொலர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய மானியம் 26.0 மில்லியன் அமெரிக்க டொலர்கள்).

05.03.2019 அன்றைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 0l/2019 இன் படி, ஊவா, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள திட்ட முகாமைத்துவ பிரிவுகளின் (PPMUs) பின்வரும் பதவிகளை நிரப்புவதற்கான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுவம் உள்ள இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**01. மாகாண துணை திட்ட பணிப்பாளர் (PS 2) - 02 பதவி**
**(வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள்)**
**02. மாகாண சிரேஷ்ட பொறியியலாளர் (PS 3) - 02 பதவி**
**(வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்கள்)**

### 01. மாகாண துணை திட்ட பணிப்பாளர் - (PS 2)

● தேவையான தகுதி

I. இளங்கலை பட்டப்படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர் (விவசாயம் பாடங்களை உள்ளடக்கியது, திட்ட மேலாண்மை, கணக்கியல், நிதி, வணிகம், பொருளாதாரம், மேலாண்மை, வணிக நிர்வாகம்) அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதி பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
**அல்லது**
ஒரு இணை அங்கத்துவம்/ இதே போன்ற ஒரு தொழில்முறை தகுதி தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தில் குறைந்தபட்சம் 11 வருடங்கள் மேலாளர் மட்டத்தில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் பணியாற்றிய அனுபவம்.

II. பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வெற்றிகரமாக இளங்கலை பட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் (விவசாயம் திட்ட மேலாண்மை, கணக்கியல், நிதி, வணிகம், பொருளாதாரம், மேலாண்மை, வணிக நிர்வாகம்) அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதி
**மற்றும்**
கூட்டாண்மை பட்டியல் உறுப்பினர் / தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்திலிருந்து தொழில்முறை தகுதி
**அல்லது**
சம்பந்தப்பட்ட துறையில் முதுகலை பட்டம், நிர்வாக மட்டத்தில் குறைந்தபட்சம் 09 ஆண்டுகள் தகுதி பெற்ற அனுபவம். அதில் 04 ஆண்டுகள் சிரேஷ்ட மேலாளர் மட்டத்தில் இருக்க வேண்டும்

III. பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில இருந்து வெற்றிகரமாக இளங்கலை பட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் (விவசாயம் திட்ட மேலாண்மை, கணக்கியல், நிதி, வணிகம், பொருளாதாரம், மேலாண்மை, வணிக நிர்வாகம்) அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதி மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் முதுகலை பட்டம் மற்றும் கூட்டாண்மை / பட்டய உறுப்பினர் / இதே போன்ற தொழில்முறை தகுதி பெறப்பட்டது. தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் குறைந்தபட்சம் 07 வருடங்கள் தகுதியான அனுபவத்துடன். அதில் 03 ஆண்டுகள் சிரேஷ்ட மட்டத்தில் இருக்க வேண்டும்

IV. சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்க நிர்வாகச் சேவையின் தரம் 1 அதிகாரி அல்லது அதுபோன்ற நிலை தரம் 1 பதவியில் குறைந்தது 04 வருட அனுபவம்.

### 02. மாகாண சிரேஷ்ட பொறியியலாளர் (PS 3)

● தேவையான தகுதி

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து தொடர்புடைய துறையில் இளங்கலை பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்தவர்
**அல்லது**
பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி சமமானதாக சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்பு.
**அல்லது**
இணை அங்கத்துவம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட இதேபோன்ற தொழில்முறை தகுதி,
தொடர்புடைய துறையில் தொழில்முறை நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் தகுதி பெற்ற அனுபவம்.

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தொடர்புடைய துறையில் இளங்கலை பட்டம்
**அல்லது**
பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி சமமானதாக சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கான தகுதி
**அல்லது**
இணை அங்கத்துவம்/ இதே போன்ற ஒரு தொழில்முறை தகுதி தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம்
**மற்றும்**
தொடர்புடைய துறையில் முதுகலை பட்டம் அல்லது கூட்டாண்மை பட்டய உறுப்பினர் அல்லது அது போன்று தகுதி, அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட தொழில்முறை தகுதி,
நிர்வாக மட்டத்தில் குறைந்தபட்சம் 08 ஆண்டுகள் தகுதி பெற்ற அனுபவம்

III. அரச நிர்வாக சேவையின் வகுப்பு 1 அதிகாரி அல்லது தொடர்புடைய துறையில் அதே நிலை
**அத்தோடு**
வகுப்பு 1 பதவியில் குறைந்தபட்சம் 03 ஆண்டுகள் தகுதி பெற்ற அனுபவம்.

- வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் அனுபவம் அவசியம். மற்றும் உலக வங்கி நிதியுதவியில் அனுபவம், திட்டப்பணிகள் கூடுதல் தகுதியாக இருக்கும்.
- விண்ணபத்தின் இறுதித் திகதியில் 64 வயதுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

**தேர்வு செய்யும் முறை:** தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணபதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர்

**சம்பள அளவு:** 05.03.2019 இன் நிர்வாக சேவைகள் சுற்றறிக்கை இல: 01/2019 இன் அடிப்படையில் வழங்கப்படும்

**வேலைவாய்ப்புக்கான நிபந்தனைகள்:**
அனைத்து நியமனங்களும் 05.03.2019திகதியிடப்பட்ட 01/2019 என்ற முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின்படி மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பங்கள்:**
அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்கள் விண்ணப்பங்களை சுயவிபரக்குறிப்புடன் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் விபரத்துடன் சான்றிதழ்களின் நகல்களுடன் 11 ஒக்டோபர் 2022 அன்று அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் கீழ் காணபபடும் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பதாரர்கள் தற்போது அமைச்சுக்கள், அரசு/ அரை அரசாங்க சேவைகளில் பணியாற்றினால் திணைக்களங்களின் தலைவர் ஊடாகக் தங்களது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

- விண்ணப்பித்த பதவி கடித உறையின் மேல் இடது மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

**செயலாளர்**
**கமத்தொழில் அமைச்சு**
**விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம்**
**இலக்கம் 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.**

---

பெருந்தோட்ட அமைச்சு
## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### கோமெர தேயிலைத் தொழிற்சாலையில் மின்சார நிறுவல்களுக்கு ரீ வயரிங் செய்வதற்காக விலைமனுக் கோரல்

**(INVITATION OF BIDS FOR RE.WIRING OF ELECTRICAL INSTALLATION AT GOOMERA TEA FACTORY)**

**கேள்வி இல. SLSPC/PL/RE-WIRING.GOOMERA/T.195/2022**

தவலந்தென்ன கோமெர தேயிலைத் தொழிற்சாலையில் மின்சார நிறுவல்களுக்கு ரீ வயரிங் செய்வதற்கான ஒப்பந்தத்திற்கு தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

2022-10-03ஆம் திகதி முதல் கடமை நேரங்கள் (மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை - எந்தவொரு வேலை நாளிலும்) 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியும் நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு 12, இல. 21, மீராணியா வீதி, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்து மற்றும் 2022-10-17ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் பன்வில, கல்பிஹில்ல, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன பிராந்திய அலுவலகத்திலிருந்து வயரிங் முறைமையின் விபரக்குறிப்பு மற்றும் வடிவமைப்பு என்பவற்றை அடக்கிய விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்களை 2022 ஒக்டோபர் 18ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு பெறுகைக் குழுவின் தலைவருக்கு நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு 12, இல. 21, மீராணியா வீதி, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 200,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியை மக்கள் வங்கி, 1ஆம் நகரக் கிளையில் பேணப்படும் 046100240000933 எனும் கணக்கிலக்கத்திற்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்புச் செய்து கொடுப்பனவு பற்றுச்சீட்டை விலைமனு ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென முத்திரைக் குறியிட்டு இரு வெவ்வேறான உறைகளில் உள்ளடக்கி பின் அவ்விரண்டடையும் வேறொரு உறையில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தேயிலைத் தொழிற்சாலையில் மின்சார நிறுவல்களுக்கு ரீ வயரிங் செய்வதற்கான விலைமனு” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் / ஒப்பந்தக்காரர்கள் மேலதிக விபரங்களை விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் கோமெர தோட்டத்தின் அத்தியட்சகரை 0815-634907 / 0777710920 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு அல்லது முன்னேற்பாட்டுடன் நேரத்தை ஒதுக்கிக்கொண்டு தோட்டத்திற்கு விஜயம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.

விலைமனுக்கள் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் 2022 ஒக்டோபர் 18ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கொழும்பு-12, இல. 21, மீராணியா வீதி, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் திறக்கப்படும்.

விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் ஆகக் குறைந்தது 63 நாட்களுக்கு நிலையானதாக மற்றும் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் கேள்வியின் ஒரு பகுதியை அல்லது முழுக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**21, மீராணியா வீதி,**
**கொழும்பு -12.**

---

# பெறுகை அறிவித்தல்
## மாவட்ட பொது வைத்தியசாலை – சிலாபம்

01. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வேலைகளுக்காக பெயர் பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மாவட்ட பொது வைத்தியசாலை பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் ஏற்கப்படும். நிர்மாண விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் நிர்மாண காலம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமை செயற்படுத்தப்படும்.

03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் அத்துடன் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்ட நிறுவனமக இல்லாதிருத்தல் வேண்டும்.

04. இதுபற்றிய மேலதிக விபரங்கள் மாவட்ட பொது வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணங்களை சாதாரண வேலை நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2022.09.27 முதல் 2022.10.11 வரை எந்த கடமை நாட்களிலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்விகள் சமர்ப்பிக்கும் ஆவணங்களை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் GH/CH/PL/10/2022 என்ற கேள்வி ஆவண இலக்கத்தின் கீழ் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் இடம் 2022.10.12 மு.ப. 10.00 இற்கு முன்பு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் வேளையில் வருகைதந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

| உருப்படி | நிர்மாணத் திற்காக மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மில்.) | கேள்விப் பிணை (ரூ) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப் படாத தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| மருந்துக் களஞ்சியங்களில் ராக்கை அமைப்பை மேம்படுத்தல் மற்றும் களஞ்சியத்திற்குள் நிறைவேற்ற வேண்டிய பழுது பார்த்தல்களை மேற்கொள்ளல் | 1.49 | 29,000.00 | 63 நாட்கள் | 2500.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**சிலாபம்.**

---

கஹவத்தை பிரதேச சபை
# கேள்வி அறிவிப்பு

### சொத்து குத்தகைக்கு விடல் – 2023 மற்றும் 2023ம் வருடத்துக்கான வழங்குநர்களை பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

இங்கு கீழ்க் காணப்படும் உப பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கஹவத்தை பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்கள் (கஹவத்தை பொது வியாபாரச் சந்தைக் கட்டிடத்தின் மாட்டிறைச்சிக் கடை, கஹவத்தை பொது வியாபாரச் சந்தைக் கட்டிடத்தின் ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடை, பொதுக் கழிவறை) என்பன 2023.01.01 தொடக்கம் 2023.12.31 திகதி வரையிலான ஒரு வருட காலப் பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்காக, முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி பத்திரங்கள் 2022.10.20 திகதி மு.ப 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அன்றைய தினமே மு.ப 10.30 மணிக்கு பிரதேச சபை பிரதான காரியாலயத்தில் கேள்வி பத்திரங்கள் திறக்கப்படும்.

2022.09.20 ம் திகதி முதல் 2022.10.19 ம் திகதி பி.ப 3.00 மணி வரை கஹவத்தை பிரதேச சபையில், கேள்விப்பத்திரத்திற்குரிய வைப்புக் கட்டணத்தையும் விண்ணப்பப் படிவக் கட்டணத்தையும் செலுத்தி, பெறப்பட்டு, பூரணப்படுத்தி ஒப்படைக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திர விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையை முன் வைத்தல் வேண்டும். இச் சொத்து குத்தகைக்கு விடப்படும் கேள்வித் தொகையின் அடிப்படையில் அரசாங்கத்தினால் அறவிடப்படும் ஏனைய வரிகளுக்கும் உட்படும். இது தொடர்பான மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கஹவத்தை பிரதேச சபை பிரதான காரியாலயத்தில் அல்லது 045-2270275 என்ற தொ.பே எண்ணுடன் தொடர்பு கொண்டு அல்லது கஹவத்தை பிரதேச சபையின் உத்தியோக பூர்வ முக நூல் பக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திர விண்ணப்பப் படிவத்துக்கான உரிய வைப்புக் கட்டணங்களும், விண்ணப்பப் படிவக் கட்டணங்களும் கீழ்வருமாறு.

உப பட்டியல்

| இல | விபரம் | விண்ணப்பப் படிவ கட்டணம் ரூ. | கேள்விப்பத்திர பிணை ரூ. | ஆகக் குறைந்த விலை கூறல் ரூ. |
|---|---|---|---|---|
| 01 | கஹவத்தை பொது வியாபாரச் சந்தைக் கட்டிடத்தின் மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 82,500.00 | 1,650,000.00 |
| 02 | கஹவத்தை பொது வியாபாரச் சந்தைக் கட்டிடத்தின் ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடை | 1000.00 | 11,000.00 | 220,000.00 |
| 03 | பண்டாரநாயக்க மாவத்தை பொதுக்கழிவறை | 1000.00 | 250.00 | 5,000.00 |
| 04 | கஹவத்தை பொது வியாபாரச் சந்தைக் கட்டிடத்தின் பொதுக் கழிவறை | 1000.00 | 250.00 | 5,000.00 |

மேலும் 2023 வருடத்துக்கான கஹவத்தை பிரதேச சபையின் வழங்குனர்களை பதிவு செய்தல் தொடர்பான நடவடிக்கைகள் 2022.10.01 ம் திகதி முதல் 2022.11.30 ம் திகதி வரை நடைபெறுவதால் இது தொடர்பான மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கஹவத்தை பிரதேச சபை பிரதான காரியாலயத்தில் அல்லது 045-2270275 என்ற தொ. பே எண்ணுடன் தொடர்பு கொண்டு அல்லது கஹவத்தை பிரதேச சபையின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2022.10.20 ம் திகதி**
**கஹவத்தை பிரதேச சபை காரியாலயத்தில்.**
**தொ.பே - 0452270275**
**பெக்ஸ் - 0452271275**

**கே.எம் ஜினதாச,**
**தலைவர்,**
**கஹவத்தை பிரதேச சபை.**

---

## அறிவித்தல்

இலக்கம் 906/AB கனேமுல்லை வீதி வெலிகம்பிட்டிய ஜா-எல எனும் இடத்தில் அமைந்துள்ள சஹன அடகு நிறுவனத்திற்கு சொந்தமான WP/PB/CO 5381 என்ற இலக்கத்தைக் கொண்ட அடமான உரிமம் இரத்துச் செய்யப்பட்டுள்ள தாக இந்த அறிவித்தல் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

2022.12.31ம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# இந்தியாவுக்கு தொடர் வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டியில் வெற்றியீட்டிய இந்திய அணி 2–1 என தொடரை கைப்பற்றியது.




ஹைதராபாத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஆஸி. அணி 20 ஓவர்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீரர் கெமரோன் கிரீன் (52) மற்றும் கடைசி வரிசையில் கிம் டேவிட் (54) அரைச்சதம் பெற்றனர்.

பதிலெடுத்தாடிய இந்திய அணிக்கு விராட் கொஹ்லி (63) மற்றும் சூர்யகுமார் யாதவ் (69) அதிரடியாக ஆட அந்த அணி 19.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

# பாகிஸ்தான் பரபரப்பு வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டி20 போட்டியில் 3 ஓட்டங்களால் பரபரப்பு வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி 7 போட்டிகளைக் கொண்ட தொடரை 2–2 என சம நிலைக்கு கொண்டுவந்தது.

கராச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பாக். அணிக்காக ஆரம்ப வீரர் மொஹமட் ரிஸ்வான் 67 பந்துகளில் 88 ஓட்டங்களை விளாசியதன் மூலம் அந்த அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 166 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய இங்கிலாந்து அணி முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் வெற்றி இலக்கை நெருங்கியபோதும் 19.2 ஓவர்களில் 163 ஓட்டங்களுக்கு சுருண்டது.



# சம்பியனானது ஓல்ட் மதீனியன்

**அக்குறணை குறூப் நிருபர்**




கண்டி, மடவலை பஸார், கொட்டுவேகெதர விளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்த அணிக்கு 7 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஓல்ட் மதீனியன் அணி செம்பியனானது.

கடந்த மூன்று தினங்களாக இடம் பெற்ற இப்போட்டித் தொடரில் 16 அணிகள் பங்கேற்றன. இறுதிப் போட்டியில் டவுன் விளையாட்டுக்கழக அணியையே ஓல்ட் மதீனியன் அணி எதிர்கொண்டது.

இப்போட்டியில் வளர்ந்து வரும் வீரருக்கான பரிசை எம். நவின் பெற்றுக்கொண்டதோடு சிறந்த பந்துவீச்சாளருக்கான பரிசை எஸ். சிவா கைப்பற்றினார். சிறந்த துடுப்பாட்ட வீரராக ஏ. றஹ்மான் தெரிவுசெய்யப்பட்டார். ஆட்டநாயகன் விருதை வசீம் வென்றார்.

# சம்மாந்துறை டைட்டன்ஸ் வெற்றி



சம்மாந்துறை டைட்டன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் சம்மாந்துறை முகைடீன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் தொடரின் சம்பியன் கிண்ணத்தை டைட்டன்ஸ் அணி வென்றது.

பிராந்தியத்தில் உள்ள 32 கழகங்கள் இத் தொடரில் பங்குபற்றின. இதன் இறுதிப் போட்டியில் சம்மாந்துறை நியுசன் அணியையே டைட்டன்ஸ் எதிர்கொண்டது.

போட்டியில் அதிதிகளாக இளைஞர்கள் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்கனான், சம்மாந்துறையின் சுலைமான் மோட்டார்ஸ் நிறுவன உரிமையாளர் பர்ஹார், டைட்டன்ஸ் கழகத்தின் செயலாளர் ரையிஸ் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

# ஜே.ஆர். ஜெயவர்தன சவால் கிண்ணம் றோயல் வசமானது

கண்டி பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற நான்காவது வருடாந்த முதல் பதினொருவர் கால்பந்து போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரி, திரித்துவக் கல்லூரியை 2–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

இந்த வெற்றியுடன் ஜே.ஆர். ஜெயவர்தன ஞாபகார்த்த சவால் கிண்ணத்தை றோயல் கல்லூரி கைப்பற்றியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற இந்தப் போட்டியில் றோயல் கல்லூரியின் முன்கள வீரர் இலாம் ரிஸ்வான் தலையால் முட்டி பெற்ற கோல் மூலம் அந்தக் கல்லூரி முதல் பாதியில் 1–0 என முன்னிலை பெற்றது.

போட்டியில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய றோயல் கல்லூரி இரண்டாம் பாதியின் நடுப்பகுதியில் மொஹமட் சனீரின் கோல் மூலம் வெற்றியை உறுதி செய்தது.



## சர்வதேச செய்திகள்

# இத்தாலி பொதுத் தேர்தலில் தீவிர வலதுசாரிகள் வெற்றி

இத்தாலி பொதுத் தேர்தலில் தீவிர வலதுசாரி தலைவர் ஜோர்ஜியா மெலோனி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இத்தாலியின் முதல் பெண் பிரதமராக அவர் பதவி ஏற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இத்தாலியில் தீவிர வலதுசாரி அரசு ஒன்றை மெலோனி அமைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்றாவது பொருளாதாரமாக இத்தாலி இருக்கும் நிலையில் இந்த முடிவு ஐரோப்பாவுக்கு எச்சரிக்கை சமிக்ஞையாக உள்ளது.

எனினும் வெற்றிக்கு பின்னர் பேசிய மெலோனி, தனது இத்தாலி சகோதரர்கள் கட்சி அனைவருக்குமான ஆட்சியை நடத்தும் என்றும் மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் செய்ய மாட்டாது என்றும் உறுதி அளித்துள்ளார்.

“இத்தாலியின் சகோதரர்கள் தலைமையிலான வலதுசாரி அரசு ஒன்றுக்கு ஆதரவாக இத்தாலியர் தெளிவான செய்தி ஒன்றை வழங்கியுள்ளனர்” என்று ரோமில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் மாகாண முடிவுகளின்படி மெலோனியின் தீவிர வலதுசாரிகள் 26 வீத வாக்குகளை வென்றுள்ளனர்.




அவர்களுக்கு நெருக்கமான போட்டியாக இருந்த மைய இடதுசாரி ஜனநாயகக் கட்சி தோல்வியை ஒப்புக்கொண்டது.

இதன்படி மட்டியோ சல்வினியின் தீவிர வலதுசாரி லீக் மற்றும் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனியின் மைய வலதுசாரி போர்சா இத்தாலிய கட்சிகளைக் கொண்ட மெலோனியின் கூட்டணி 44 வீத வாக்குகளை வென்று பாராளுமன்றத்தின் இரு அவைகளையும் கைப்பற்றியுள்ளது.

மெலோனி தனது தேர்தல் பிரசாரத்தில் வரி குறைப்பு, சட்டவிரோத குடியேற்றவாசிகளை நிறுத்த கடல் தடுப்பு அமைப்பது மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் இத்தாலியர்களுக்கு முன்னுரிமை அளிப்பது பற்றி வாக்குறுதி அளித்திருந்தார்.

நேற்று உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகள் வெளியானபோதும் வரும் நவம்பர் நடுப்பகுதியிலேயே புதிய அரசு அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ரஷ்யப் பாடசாலையில் சூடு: ஒன்பது பேர் பலி



மத்திய ரஷ்யாவில் துப்பாக்கிதாரி ஒருவர் பாடசாலை ஒன்றுக்குள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது ஒன்பது பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இசெவ்ஸ் நகரில் நேற்று இடம்பெற்ற இந்தத் தாக்குதலை அடுத்து அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். தாக்குதல் இடம்பெற்ற பாடசாலையில் சுமார் 1000 மாணவர்கள் மற்றும் 80 ஆசிரியர்கள் உள்ளனர்.

துப்பாக்கிதாரி சம்பவ இடத்திலேயே தற்கொலை செய்து கொண்டிருப்பதோடு உயிரிழந்தவர்களில் ஏழு மாணவர்கள் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு ஆசிரியர்கள் மற்றும் ஒரு காவலரும் கொல்லப்பட்டவர்களில் உள்ளனர்.

எனினும் இந்தத் தாக்குதலுக்கான காரணம் தொடர்பில் விபரம் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவில் பாடசாலைகளில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெறுவது மிக அரிதானதாகும்.

ரஷ்யாவின் தென்கிழக்கு நகரான கசானில் உள்ள பாடசாலை ஒன்றில் கடந்த 2021 மே மாதம் பதின்ம வயதினர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஏழு சிறுவர்கள் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற பாடசாலையின் உட்பகுதியை காட்டும் புகைப்படங்கள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன. இதில் சில படங்களில் வகுப்பறை தரையில் இரத்தம் தோய்ந்து காணப்படுவதோடு ஜன்னல்களில் துப்பாக்கி கு ண்டுகள் பாய்ந்த துளைகள் உள்ளன.

இரு கைத்துப்பாக்கிகளைக் கொண்டு இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக உள்ளூர் எம்.பி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பங்களாதேஷில் படகு கவிழ்ந்து 32 பேர் பலி

பங்களாதேஷில் ஹிந்து பக்தர்களை ஏற்றிய படகு ஒன்று ஆற்றில் மூழ்கியதில் குறைந்தது 32 பேர் உயிரிழந்திருப்பதோடு டஜன் கணக்கானோர் காணாமல்போயுள்ளனர்.

பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுவர்களை நிரப்பிய படகு பிரபல கோயில் ஒன்றுக்கு செல்லும் வழியில் கரடோயா ஆற்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கவிழ்ந்துள்ளது.

இந்தப் படகில் சுமார் 90 பேர் இருந்திருப்பதோடு, கிட்டத்தட்ட அறுபது பேர் தொடர்ந்தும் காணாமல்போயிருப்பதாக மாவட்ட பொலிஸ் தலைவர் சிராஜுல் ஹுதா குறிப்பிட்டுள்ளார்.



இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட உடல்களில் 16 பெண்கள் மற்றும் 10 சிறுவர்கள் இருப்பதாக பஞ்சகிர் மாவட்ட நிர்வாகி ஜஹுருல் இஸ்லாம் தெரிவித்தார். காணாமல் போனோர் தொடர்பில் விபரங்களை சேகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

# பிரிட்டன் பவுண்ட் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி

பிரிட்டன் நாணயமான பவுண்ட்டின் மதிப்பு வரலாறு காணாத அளவு சரிந்துள்ளது.

1971ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய சரிவாக இது உள்ளது.



அமெரிக்க டொலருக்கு நிகரான பவுண்ட்டின் மதிப்பு நேற்றுக் காலை சுமார் 4 வீதம் சரிந்தது. பின்னர் அது சற்றே மீண்டது.

தற்போது ஒரு பவுண்ட்டின் மதிப்பு ஓர் அமெரிக்க டாலர் 5 காசாக உள்ளது.

பிரிட்டனின் புதிய நிதிய மைச்சர் குவாசி குவார்டெங் சர்ச்சைக்குரிய சில பொருளாதாரத் திட்டங்களை அறிவித்துள்ளார்.

வரலாறு காணாத வரிச் சலுகைகள், பெரிய அளவில் கடன் பெறுவதற்கான திட்டங்கள் ஆகியவை அறிவிக்கப்பட்டுள்ளன. அது பணவீக்கத்தை மேலும் மோசமாக்கும் என்று முதலீட்டாளர்கள் அஞ்சுகின்றனர்.

# தலிபான்கள் அரசில் பாடத்திட்டம் திருத்தம்

ஆப்கானிஸ்தான் கலாசாரம், சர்வதேச கல்வித் தரம் மற்றும் இஸ்லாமியச் சட்டங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலைப் பாடத்திட்டத்தை மறுபரிசீலனை செய்யவும், திருத்தவும் திட்டமிட்டுள்ளதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர்.



இது தொடர்பில் ஆப்கானிஸ்தான் உயர்கல்வி அமைச்சின் தலிபான் பேச்சாளர் அஹ்மத் தக்கி குறிப்பிடுகையில், 35 கல்விப் பாடத்திட்டங்கள் ஏற்கனவே இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், ஆப்கான் முழுவதும் ஒரே பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.